# ஆறடி நிலம்

ருஷ்ய ஞானி டால்ஸ்டாய்
எழுதியது.

“சுதந்திரச் சங்கு” காரியாலயம்
திருவல்லிக்கேணி, சென்னை.
1934

0142,3M7L,A
31N35
121267

# ஆறடி நிலம்

## அக்காளும் தங்கையும்

அக்காள் தங்கையைப் பார்க்க வந்திருந்தாள். அக்காள் பக்காப் பட்டணவாசி; தங்கை சுத்தப் பட்டிக்காடு. மூத்தவள் ஒரு பெரிய வியாபாரிக்கு வாழ்க்கைப் பட்டவள்; இளையவள் ஒரு குடியானவனின் மனைவி. இருவரும் சாப்பிட்டவாறே பேச ஆரம்பித்தனர்; ஒருவருக் கொருவர் தங்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றிப் பெருமையாய்க் கூறிக் கொண்டனர்.

அக்காள் சொன்னாள் :

"வாழ்ந்தால் பட்டண வாசத்தில் வாழ வேண்டும். அங்கு நாங்கள் தினந்தினமும் அழகழகான ஆடைகள் டுத்துவோம்; புதிது புதிதான ஆபரணங்கள் அணிவோம்; தினுசு தினுசான தின்பண்டங்கள் உண்போம்; குழந்தை ளுக்குப் பட்டுச் சட்டை போட்டுப் பாராட்டிச் சீராட்டு வாம்; நந்தவனங்களில் உல்லாசமாக உலாவுவோம்; படக் சிகளுக்கும், நாடகங்களுக்கும் போய் வருவோம். ஆ! ன்றால் அது வல்லாவா சுகம்."

ங்கவளுக்கு இளையவள் சளைத்தவளா? அவள் ல்லாம் இவளுடைய நெஞ்சில் சுருக்கென்று ம் தன்னுடைய பெருமையைப் பற்றிக்

உங்கள் சுகபோகங்களெல்
யிருந்தாலும் எனக்கு
க்காச

O142,3M7L,
31N35



எளிய வாழ்க்கையை விட்டுவிட நான் தயாரா யில்லை. எங்கள வாழ்க்கையில் ஆரவாரமில்லை, கொந்தளிப்புக் கிடையாது என்பது வாஸ்தவம். நீங்களோ, ஒன்று லக்ஷக் கணக்கில் வியாபாரம் செய்ய வேண்டும்; இல்லையானால் கொஞ்சம் தவறினாலும் ஓட்டாண்டியாக வேண்டியது தான். 'நஷ்டம் லாபத்திற்கு அண்ணன்' என்று நீ கேள்விப் பட்டதில்லையா? உங்களிலே ஒருவர் இன்று பணத்தில் படுத்துப் புரளலாம்; அவரே நாளைத் தெருவில் நின்று திண்டாட வேண்டிநேரும். உங்கள் வாழ்வில் நிச்சயமில்லை; நிலையானது ஒன்றும் கிடை யாது. பட்டிக்காட்டு வாழ்க்கையை நம்ப முடியும். எங்கள் வரும்படி கொஞ்சமானது; என்றாலும் நீடித்திருப்பது; அதிகமில்லா விட்டாலும் போதுமானது."

121267

மூத்தவளும் உடனே சளைக்காமல் பதில் கூறினாள்:

"போது மானதா? வேடிக்கைக்காகச் சொல்லுகிறாயா?
உங்களுடைய ஆட்டு மாட்டு மந்தைகளா போதுமா
சொத்து? நல்ல ஆடையில்லை, ஆபரணங்கள் இல்லை, ஸ்நேகி
தர்களில்லை; இதுவா போது மென்பதன் அர்த்தம்? உங்கள்
புருஷர்கள். எவ்வளவுதான் கஷ்டப்பட்டு உழைத்தாலு
நீங்களென்னமோ இந்த மண் குடிசையில்தானே வாழ்ந்தா
வேண்டும்—இதிலேயேதானே சாகப் போகிறீர்கள்?—இ
மட்டுமா! உங்கள் குழந்தை குட்டிகளும் இதிலேயே வாழ்ந்
இதிலேயே சாகவேண்டியவை தானே?"

இளையவள் சொன்னாள்:

"எங்களுக்கு இந்த வாழ்க்கை பிடித்துப் போ
டது. நாங்கள் பூமியை உழுது பண்படுத்தி
கஷ்டப் பட்டாலும் பூமி எங்களுக்குச் சொ
தலாவது உண்டு. ஒருவனிடம் த
செய் வேண்டிய அவசியமில்லை.
புனைசுருட்டு, சாடி சொல்ல
வாழ்கிறீர்கள். இன்று
...ர்கள்; ம

கூத்தி முதலியவற்றை ருசி பார்க்க ஆரம்பித்து விட்டால், அப்புறம் உங்கள் பாடு அதோகதிதான்.''

இளையவளின் கணவனுகிய பிக்கன் ஒரு மூலையி லுட்கார்ந்து இச்சம்பாஷணை முழுவதையும் கவனித்து வந்தான் —இடையிலே அவன் சொல்லுகிறுன் :

"உண்மை, உண்மை. என் சின்ன வயது முதற் கொண்டு நான் பூமித்தாய்க்குச் சேவை செய்து வருகிறேன். கையில் எப்போதும் ஏதாவதொரு வேலை யிருப்பதால், குடி கூத்தி முதலிய முட்டாள் நினைவுகளுக்கு நேரங் கூடக் கிடையாது. ஆனல் நெடுநாளாக எனக்கு ஒரேயொரு குறை உண்டு—எனக் கிருக்கும் நிலம் ரொம்பக் கொஞ்சம். சாகுபடி செய்ய நிலம் மட்டும் சிறிது அதிகமாகக் கிடைத்து விட்டால் அப்புறம் எனக்கிணை யாரும் இல்லை—சனியன்கூட என்னுடைய இன்பத்தைப் பிடுங்கிக் கொள்ள முடியாது".

இரு சகோதரிகளும் சாப்பிட்டுவிட்டுப், பத்துப் பாத்திரம் விளக்கியபின், பேசியவாறே தூங்கி விட்டனர்.

அப்போது மற்ருெரு மூலையிலிருந்து சனிபகவான் வெளிப்பட்டான். அவன் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடியது. பிக்கன் தனக்கு நிரம்ப நிலம் கிடைத்து விட்டால் போதும்; சனியன்கூட அவற்றைத் தன்னிடமிருந்து பிடுங்க முடியாதென்று கூறி விட்டானல்லவா?

"ஆகட்டும், ஒரு கை பார்ப்போம். நானே உனக்கு நிரம்ப நில பலங்கள் கொடுத்துத் திரும்பவும் அவைகளைப் பிடுங்கிக் கொள்ளுகிறேன்'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான் சனிபகவான்.

## பிக்கன் நிலம் வாங்கினுன்

இவர்களது குடிசைக்குப் பக்கத்தில் ஓர் மிராசுதாரிணி வசித்து வந்தாள். அவளுக்கு அவ்வூரில் 40 ஏக்கர் நிலம் உண்டு. அவள் மிகவும் நல்லவள். எல்லோரையும் அன்போடு நடத்துவாள். ஏழைகளிடம் கருணை யுள்ளவள்.

ஆனால் இப்போது ஒரு புது 'ஓவர் ஸீர்' அவளிடம் வேலையி லிருந்தான். அவன் ஒரு போர் வீரன். மகா கொடியவன். தொட்டதற் கெல்லாம் குற்றஞ் சொல்லுவான்; பண் ணையில் அவன் வைத்தது தான் சட்டம். ஒவ்வொரு குற் றத்திற்கும் தண்டனையாக அபராதம் செலுத்த வேண்டும். எவ்வளவு கண்காணிப்பா யிருந்தாலும் பிக்கனின் காளை களில் ஒன்று அவளது சோளக் காட்டில் புகுந்து விடும்; ஒரு பசு வாழைத் தோப்பைக் கொஞ்சம் ருசி பார்க்கும்; கன்றுக் குட்டிகள் மேய்ச்சல் காடுகளில் துள்ளிக் குதிக் கும்—இக் குற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் அபராதம் செலுத்தித் தீரவேண்டும்.

அடிக்கடி அபராதம் செலுத்தும் வருத்தத்திலே, வீட்டில் தன் மனைவி மக்களைத் திட்டியும், அடித்தும் பிக் கன் ஹிம்ஸிப்பான். ஆடு மாடுகளைத் தன்னுடைய பட்டியிலும், கொட்டிலிலுமே அடைத்து வைப்பான். இவ்வகையில் ஆடு மாடுகளின் தீனிக்காகக் கொஞ்சம் பணம் அதிகமாகச் செலவானாலும், மனக் கவலையும், சஞ்சலமும், அபராதத் தொல்லையும் இல்லையென்பதில், பிக்கனுக்கு ஒருவாறு சந்தோஷமே.

கார் காலத்தில் மிராசுதாரிணி தன் நிலபலங்களை யெல்லாம் விற்றுவிடப் போகிறாள் என்று ஒரு வதந்தி உலாவியது. அவளுடைய நிலங்கள் பூராவையும் அவள் கீழுள்ள ஓவர்ஸீரே வாங்கி விடப் போவதாகவும் ஜனங்கள் பேசிக் கொண்டனர். இவ் வதந்திகள் பரவியதுதான் தாமத தம், ஊரார்கள் பயந்தே போயினர். ஏனெனில் ஓவர்ஸீர் என்றால் அவ்வூரில் அவ்வளவு நடுக்கம்.

"ஐயோ! அவன் கொடியவனாயிற்றே. மிராசுதாரிணி யின் வேலையாளா யிருந்த பொழுதே இவ்வளவு கொடுமை செய்த இவன், இன்னும் நிலத்திற்குத் தானே சொந்தக் காரனாய்ப் போய் விட்டால் எவ்வளவு கொடுமை செய் வானோ? நிலத்தை அவனுக்கு விட்டுவிடக் கூடாது; நாம் எல்லோரும் சேர்ந்தாவது ஆளுக்குக் கொஞ்சம் போட்டு

அதை வாங்கிவிட வேண்டும்' என்று ஊரார் கூட்டங்கள் கூடி யோசிக்கலாயினர்.

கிராமப் பஞ்சாயத்தார் மிராசுதாரிணியிடம் ஒவர் ஸீருக்கு நிலத்தை விற்கக் கூடா தென்றும், தாங்களே அவனைக் காட்டிலும் அதிகமான விலை கொடுத்து வாங்கிக் கொள்ளத் தயாராயிருப்பதாகவும் தெரிவித்தனர். இதற்கு அவளும் ஒப்புக் கொண்டாள். ஊர்க் காரர்கள் மகா நாடு கூட்டினர். ஆனால் மகா நாட்டில் ஒருவராவது இன்னொரு வர் சொல்வதை ஒப்புக் கொள்ளத் தயார்ாயில்லை; ஆகவே மகா நாடு முறிந்து போயிற்று. ஊரார் திரும்பவும் ஒன்று கூடி ஆலோசித்தனர், ஒவ்வொருவனும் கூடுமான அளவு நிலத்தில் ஒரு பகுதியை யாவது விலைக்கு வாங்கிவிட வேண் டும் என்று முடிவு கட்டினர். மிராசுதாரிணியும் இதற்கு ஒப்புக் கொண்டாள்.

ஒரு நாள் அண்டை வீட்டுக்காரன் ஒருவன் அந்த நிலத்தில் 7 ஏக்கர்கள் வாங்கி யிருப்பதாகப் பிக்கன் கேள் விப் பட்டான். அதிலும் பாதிப் பணம் மட்டுமே கொடு பட்டதாகவும் மற்றப் பாதியை ஒரு வருஷத்திற்குள் கொடுப் பதாக ஒப்பந்தம் என்றும் தெரியவந்தது. பிக்கனுக்கு நாக்கில் ஜலம் ஊறிற்று; பொறாமை பொங்க ஆரம்பித்தது. "நிலம் பூராவையும் மற்றவர்கள் வாங்கிக் கொண்டு விட் டால் நாம் என்ன செய்வது?" என்று தன் மனைவியோடு கலந்தாலோசித்தான். "இதோ பார், ஒவ்வொருவரும் ஒவ் வொரு பகுதி நிலம் வாங்குகிறார்கள். நாமும் என் ஒரு 4 ஏகர் நிலமாவது வாங்கக் கூடாது? இப்போதுள்ள நிலையில் சாப்பாட்டுக்கே கஷ்டமா யிருக்கிறது, அதிலும் அந்த ஒவர்ஸீர்ப் பாவிக்குக் கொடுத்தே நான் இளைத்துப் போனேன். என்ன சொல்லுகிறாய்?" என்று பிக்கன் கேட்டான். இருவரும் எப்படிப் பணம் திரட்டுவது என்று யோசித்தனர்.

அவர்கள் அதுவரையில் சேர்த்து வைத்திருந்தது 150 ரூபாய் உண்டு; இத்துடன் ஆடு மாடுகள் சிலவற்றை

விற்றும், தங்கள் மகனை வேலைக்கு அனுப்பியும் இவ்வாறெல்லாம் சேகரித்ததில், பாதிப் பணம் கிடைத்தது.

பிக்கன் 6 ஏகர் நிலத்தைப் பார்த்து வைத்தான். பின்னர் மிராசுதாரிணியிடம் சென்று அதை விலை பேசி முடித்து விட்டான். பாதிப் பணம் அப்பொழுதே கொடுத்து விட்டான்; மற்றப் பாதியை இரண்டு வருஷத்தில் கொடுப்பதாக ஒப்புக் கொண்டான். ஆ! இப்போது பிக்கன் ஒரு பண்ணை முதலாளி. தன்னுடைய மச்சானிடம் சிறிது கடன் வாங்கிப் புதுநிலத்தில் விதை விதைத்தான். ஆ! அந்த வருஷமே ஆளுயரம் கதிர்கள் அதிசயமாய் விளைந்தன. மிராசுதாரிணிக்கு முழுத் தொகையும் கொடுத்தாய் விட்டது; மச்சான் கடனும் தீர்ந்தது.

இப்போது பிக்கன் ஓர் பண்ணை முதலாளி. அவன் மற்றவர்களுக்காக உழுவதில்லை; தனக்காகவே தன்னுடைய சொந்த நிலத்தை உழுகின்றான். தன்னுடைய சொந்த வைக்கோலால் போர் போடுகிறான்; சொந்த மரங்களை வெட்டி விறகு விற்கிறான்; சொந்த ஆட்டு மாட்டு மந்தைகளைச் சொந்த மேய்ச்சல் காடுகளில் மேய விடுகிறான். உழுவதற்கோ, விதைப்பதற்கோ அல்லது தணிக்கை பார்க்கவோ, எதற்கென்று போனாலும் தன் நிலத்தைப் பார்த்தவுடன் பிக்கன் மனதில் மகிழ்ச்சி பொங்கும்; கண்ணில் பெருமை ஒளிவிடும். தன்னுடைய நிலத்திலுள்ள புற்கள் புதுமாதிரியாய் வளருவதாக அவனுக்கு எண்ணம்; மலர்கள் வேறு வகையாகப் பூப்பதாக ஞாபகம். முன்னெல்லாம் இவன் அந்த வழியாகப் போயிருக்கிறான்; எனினும் அப்போது அந்த நிலம் சாதாரணமாகவே தோன்றியது; இன்றைய தினம் பிக்கன் அதே நிலத்தில் ஏதோ புதுமை இருப்பதாக நினைத்தான்.

## பிக்கன் கோர்ட்டேறினான்

இவ்வாறு சிறிது காலம் பிக்கன் இன்பத்தில் வாழ்ந்து வந்தான். மற்றவர்கள் பிக்கனுடைய நிலபலங்களுக்குக்

கேடு புரியாதிருந்தால் அவ்வின்பம் தடைப்பட்டிராது. எவ்வளவோ முறை சொல்லிப் பார்த்தான் ; பயனில்லை. இடைப்பையன்கள் ஆடு மாடுகளை இவனுடைய மேய்ச்சல் காடுகளில் ஓட்டிவிடுவார்கள். இரவில் ஏதாவதொரு காளை இவனுடைய தானியக் கதிர்களைச் சாப்பிட்டுவிடும். பிக்கனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்; அவனால் தாங்கமுடியவில்லை. உடனே ஜில்லாக் கோர்ட்டில் பிராது கொடுத்தான். மற்றக் குடியானவர்கள் தன்மேல் வெறுப்புக் கொண்டு இவ்வாறு செய்யவில்லையென்றும், போதுமான நிலமின்மையாலேயே இப்படி நேருகிறதென்றும் பிக்கனுக்குத் தெரியும். தெரிந்தாலும் என்ன செய்வது ; சும்மா விட்டு விட்டால் இவன் ஒட்டாண்டியாக வேண்டியதுதான். ஆகவே தன்னுடைய வரும்படியைக் குலைப்பவர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று இவன் நினைத்தான்.

முதல் முதலாகக் கோர்ட்டு மூலம் ஒருவன் தண்டனை அடைந்தான், பின்னர் மற்றொருவன் ; ஒருவன் அபராதம் செலுத்தினான், வேறொருவனும் செலுத்தினான். இதனால் ஊராருக்கு இவன்மேல் வெறுப்பேற்பட்டு விட்டது ; வேண்டுமென்றே இவனது தான்யங்களை அவர்கள் திருட ஆரம்பித்தனர். ஒரு நாள் இரவு ஒருவன் பிக்கனுடைய வாழைத் தோப்பில் புகுந்து வாழைத் தார்களையும், இலைகளையும், பட்டைகளையும் திருடிக்கொண்டு போய்விட்டான். மறுநாள் பிக்கன் அவ்வழியே போகும்பொழுது தன் வாழைத் தோப்பின் கதியைக் கண்டு உண்மையாகவே திடுக்கிட்டான். கிட்ட நெருங்கிப் பார்த்தால் ஒரேயொரு தனி மரத்தைத் தவிர மற்றவையெல்லாம் பரிபூரணமாக நாசப்பட்டுக் கிடந்தன ; சில வேரோடு வீழ்ந்திருந்தன; சில வெட்டுண்டு துண்டு துண்டாய்ச் சிதறி இருந்தன. பிக்கனுக்கோ தாங்க முடியாத கோபம். “இதைச் செய்தவன் மட்டும் யாரென்று தெரிந்தால் அவன் தோலை உரித்து விடுவேன்; அவனை உண்டு இல்லை என்று செய்து விடுவேன்” என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான். இது யாரா யிருக்கலாம் என்று எவ்வளவோ நேரம் யோசித்

துப் பார்த்தான். இவ்வாறு செய்யக் கூடியவன் சிங்கன்தான் என்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே அவன் சிங்கனிடம் போய்க் கேட்டான்; சிங்கன் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்ட ஆரம்பித்தான். இதனால் சிங்கன்தான் இவ்வாறு கட்டாயம் செய்திருப்பானென்று பிக்கன் முடிவு கட்டிவிட்டான்; உடனே சிங்கன் மேல் கோர்ட்டில் பிராது கொடுத்தான்; நீதிபதியின் முன் இருவரும் ஆஜராயினர். பல நாள் விசாரணையின் பேரில் சாட்சிகள் போதாது என்று மாஜிஸ்டிரேட் கேஸைத் தள்ளி விட்டார். பிக்கனுக்கோ பிரமாதமான கோபம் வந்து விட்டது; நடுக் கோர்ட்டிலேயே போலீஸையும், நியாய வாதிகளையும், நீதிபதிகளையும் ஒரே சகட்டுக்கு, மனம் போன படி திட்டலானான். "நீதிபதிகளே நீங்கள் திருடர்களோடு சேர்ந்தவர்கள்; உண்மையானவர்களாயிருப்பின் சிங்கனை விடுதலை செய்வீர்களா?" என்று நேராகவே கூறினான். அண்டை அயலிடமும், நீதிபதிகளிடமும் பிக்கனுக்கு வெறுப்புத் தட்டி விட்டது. அவன் யாரோடும் சேராமல் தானுண்டு தன் நில முண்டு என்று வாழ்ந்து வந்தான். பஞ்சாயத்தாரோடு கூட அவன் அவ்வளவாகக் கூடுவதில்லை.

இதே சமயத்தில் அவ்வூர்க் குடியானவர்களிற் பலர் வேறு இடத்திற்குக் குடிபோவதாக ஓர் வதந்தி கிளம்பியது. இதைக் கேட்டவுடன் பிக்கன் தனக்குத்தானே யோசிக்கலானான்:—"இவர்கள் எல்லாரும் தங்கள் நிலங்களை விட்டு விட்டுப் போவதால் நானும் ஏன் என் நிலத்தை விட்டு விடவேண்டும்? அவர்கள் போனால் போகட்டும்; இன்னும் சௌகரியமாகி விட்டது; அவர்களுடைய நிலங்களையும் நான் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். இப்போதுள்ளதைக் காட்டிலும் இன்னும் சௌகரியமாக வாழ முடியும்" என்றெல்லாம் நினைத்தான்.

சில நாள்களுக் கப்புறம் பிக்கன் வீட்டிற்கு ஒரு வழிப்போக்கன் வந்தான். அவனுக்கு பிக்கன் ஒரு நாள் இரவு தங்குவதற்கும், சாப்பாட்டுக்கும் வேண்டிய சௌகரியங்

கள் செய்து கொடுத்தான். சம்பாஷணைக் கிடையில் வழிப் போக்கன் ஒரு ருசிகரமான சங்கதி கூறினன்; தான் நதிக்கு அப்பாலுள்ள ஒரு தேசத்திலிருந்து வருவதாகவும், அது ஓர் குடியேற்று நாடென்றும், அங்கு குடியேறும் ஒவ்வொருவனுக்கும் 30 ஏக்கர் நிலம் இனமாகக் கொடுக்கப்படுவதாகவும் கூறினன். "அதுவும் அந்த நிலங்கள் மிகவும் செழிப்பானவை—அங்கு தானியக் கதிர்கள் யானை உயரம் வளர்கின்றன; அஞ்சாறு பிடி வைக்கோலில் ஒரு பாய் முடைந்து விடலாம்—அவ்வளவு கெட்டி, உறுதியானது. சென்ற வருடம் அன்னக் காவடியாய் அங்கு சென்ற ஓர் அனைதை இப்போது 100 ஏகர் பூமிக்கு அதிபதியாய் இருக்கிறன்; அவனது முதல் வருஷத்திய வரும்படி 10,000 ரூபாய்" என்றெல்லாம் சொல்லி, வழிப் போக்கன் பிக்கனது ஆசையைக் கிளறி விட்டான்.

பிக்கனது பேராசையும் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. அவன் யோசித்தான்:—"அங்கு அவ்வளவு சுக சௌகரியங்கள் கிடைக்கும்போது, இந்தச் சின்ன ஊரில் கிணற்றுத் தவளை போல் ஏழ்மையில் உழன்று அவதிப்படுவானேன்? இதையெல்லாம் விற்றுத் தொலைத்து விட்டுப் புதிதாக நில பலங்களும், வீடு, தோட்டங்களும் வாங்கிக் கொண்டு வாழ்ந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? இங்கோ வாழ்க்கை ஒரே நீண்ட துன்பமா யிருக்கிறது. எதற்கும் நான் அங்கு போய் ஒரு முறை நேரிலேயே பார்த்து விட்டு வருகிறேன்."

வசந்த காலம் வந்ததும் பிக்கன் நதிக்கப்பா லிருந்த தேசத்திற்குப் புறப்பட்டான். ஒரு படகில் நதியைத் தாண்டிச் சாமராபுரம் சென்று, அங்கிருந்து 30 மைல் கால் நடையாக நடந்து அந்தத் தேசத்தை அடைந்தான். வழிப் போக்கன் வர்ணித்த படியே அங்கு எல்லாம் சரியாயிருந்தது. ஒவ்வொரு குடியானவனும் இனமாக 30 ஏகர் நிலம் பெற்று மிகவும் சுகமாக வாழ்ந்து வந்தான். அவ்வூர்ப் பஞ்சாயத்தார் பிக்கனைச் சந்தோஷமாய் வரவேற்கத் தயாரா யிருந்தனர். தவிரச் சொந்தமாகப் பணம் உடையவர் எவ்வளவு நிலங்கள்

வேண்டுமானாலும் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். ரொம்ப வும் செழிப்பான பூமி கூட ஏகர் 30 ரூபா வீதம் கிடைக்கும்.

இதை யெல்லாம் தெரிந்து கொண்டவுடன் பிக்கன் முன்பனிக் காலத்தில் தன் சொந்த ஊருக்கு வந்து சேர்ந் தான். தன்னுடைய நில பலங்கள், ஆடு மாடுகள், யாவற் றையும் விற்று விட்டான். பஞ்சாயத்து ரிஜிஸ்தரிலிருந்து தன் பெயரை எடுத்து விடச் சொன்னான். திரும்பவும் வசந்த காலத்தில் தன் மனைவி மக்களோடு அந்தப் புது இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான்.

## அயலூர்க் குடியேற்றம்

அந்தப் புதுவூர்ப் பஞ்சாயத்தில் பிக்கனும் இப்போது ஓர் அங்கத்தினன். அங்கத்தினனாகச் சேருமுன் பிக்கன் செலவில் பஞ்சாயத்தார்களின் தொண்டைகள் குடியால் நனைந்தன என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. பிறகு அவர்கள் பிக்கனுக்கும் அவனது குடும்பத்திலுள்ள ஒவ் வொருவருக்கும் 30 ஏகர் வீதம் 150 ஏகர் நிலத்தைப் பிரித் துக் கொடுத்தனர். இதைத் தவிர ஊர்ப் பொது மேய்ச்சல் காடுகளையும் அவன் உபயோகித்துக் கொள்ளலாம். இப் போது பிக்கன் அவ்விடத்திலேயே வீடு கட்டிக் கொண்டு, குடித்தனத்தோடு வசிக்கிறான். பழைய இடத்திலிருந்ததை விட அவனுக்கு இரண்டு மடங்கு நிலங்கள் இங்கு கிடைத் தன. அதிலும் எல்லாம் நஞ்சைகள். முன்னைக் காட்டி லும் வாழ்க்கை பத்து மடங்கு மேலானதாய் இருந்தது. சாகுபடிக்கும், மேய்ச்சலுக்கும் தாராளமான நிலப்பகுதி கள் பிக்கனுக்குச் சொந்தமாயின.

கொஞ்ச நாள் எல்லாம் நன்றாகவே நடந்தது; வரவரப் பிக்கனுக்கு இவ்வாழ்க்கையில் அதிருப்தி உண்டாயிற்று. அவனுக்குக் கோதுமை பயிரிட வேண்டுமென்று ஆசை. ஆனால் இவனுடைய நிலத்தில் கோதுமை அவ்வளவாக வள ராது. ஒரு வருஷம் கோதுமை பயிர் செய்தால் மறு வரு ஷத்திற்கு அந்த நிலத்தைத் தரிசாய்ப் போட்டால்தான்

திரும்பவும் கோதுமை போடமுடியும். இவனுடைய வயல் களிலோ நெல்தான் விதைக்க முடியும். தவிரக் கோதுமை வளர்ச்சிக்குக் கடினமான பூமி வேண்டும்; அவைகளுக்குப் போட்டி போடுவோர் அநேகம். மற்றும் அத்தகைய நிலங் கள் அதிக மில்லாமையால் அவைகளால் அடிக்கடி சண்டை சச்சரவுகள் உண்டாயின. பணக்காரர்கள் தங்கள் நிலங்க ளில் தாங்களே சாகுபடி செய்தனர். ஏழைகளோ தங்கள் நிலங்களைக் கொதுவை வைத்துத்தான் பயிர்த்தொழில் செய்ய வேண்டி யிருந்தது. முதல் வருஷம் பிக்கன் கோதுமை விதைத்தான்; நல்ல பலன் கிடைத்தது. ஆனல் அடுத்த வருஷம் விதைப்பதற்கும், புதிதாய்த் தரிசு போடுவ தற்கும் வேண்டிய நிலம் பிக்கனிடமில்லை. ஆகவே எப்படி யாவது அதிகமான நிலமிருந்தால் இவனுடைய மனோரதம் பூர்த்தியாகும். அதற்காக ஒரு வியாபாரியின் கோதுமை வயல்களைக் குத்தகைக் கெடுத்தான். அதிலும் நல்ல லாபம் வந்தது. எனினும் ஒரேயொரு கஷ்டம். குத்தகை நிலத் திற்கும் இவனுடைய வீட்டுக்கும் வெகு தூரம். விளைந்த கோதுமையைத் தன் வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு வாட கையே அதிகமாய்ப் போயிற்று. சில வியாபாரிகள் தங்கள் நிலங்களிலேயே குடியிருந்து கொண்டு வருஷா வருஷம் பெருத்த பெருத்த லாபங்கள் அடைவதைப் பிக்கன் கவனித்திருக்கிறன். வருஷக் கணக்காகக் குத்தகை எடுத் துக் கொண்டு தானும் ஏன் அவ்வாறு வாழக்கூடாது என்று அவன் யோசித்தான்; அவ்வாறே ஏற்பாடுகளும் செய்தான்.

ஐந்து வருடங்கள் கழிந்தன. கோதுமை விளைச்சலில் பிக்கனுக்கு நல்ல லாபம். என்றாலும் அவன் மனம் அப்போ தும் திருப்திபடைய வில்லை; மாறுதலில்லாத ஒரேதரமான வாழ்க்கை அவனுக்குச் சலித்துப் போயிற்று. நல்ல நிலங் களுக்குப் போட்டா போட்டி அதிகமாயிருந்தது; பிக்கன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே ஒரு நல்ல நிலத்தைக் குடியானவர்கள் குத்தகைக்கு எடுத்து விடுவார்கள். ஒரு சமயம் சில குடியானவர்களுடைய நிலத்தை ஒரு வியாபாரி யுடன் கூட்டுச் சேர்ந்து பிக்கன் குத்தகைக் கெடுத்தான்

அதை உழுது விதை விதைக்கும் தருணம். ஏதோ ஒரு வழக்கில் அந்த நிலம் அக் குடியானவர்களுக்குச் சொந்த மல்ல என்று தீர்ப்பளிக்கப் பட்டது. என் செய்வது! அவனு டைய கஷ்டகாலம்; அவன் உழைத்த உழைப் பெல்லாம் வீணாய்ப் போய் விட்டது. அதே நிலம் இவனுக்கே சொந்த மானதாய் இருந்தால்—?

ஆகவே எப்படியாவது ஒரு பெரிய எஸ்டேட்டுக்கே எஜமானாய்ப் போகவேண்டு மென்பது பிக்கன் எண்ணம். ஒரு இன்சால்வெண்டான குடியானவனது 1500 ஏகர் நிலத் தையும் 3000 ரூபாய்க்கு விலை பேசினான். இவ்வாறு இருக் கையில் பிக்கனுடைய வீட்டிற்கு ஒரு வியாபாரி வந்தான். இருவரும் டீ குடித்துவிட்டுப் பேசிக்கொண் டிருந்தனர். பேச்சிடையே வியாபாரி, தான் அப்போதுதான் நேராகப் பாஸ்கர தேசத்திலிருந்து வருவதாகவும், அங்கு 15,000 ஏகர் நிலத்தை 3,000 ரூபாய்க்கு வாங்கி யிருப்பதாகவும் கூறினான்.

இதைக் கேட்டவுடன் பிக்கன் மனத்தில் பேராசை பொங்கியது; வியாபாரியை மிகவும் நுணுக்கமாக விசாரித் தான்; பல பல கேள்விகள் கேட்டான். "அத்தேச ஜனங் களுக்கு டீயும், கம்பளமும், மதுவும், காசுகளும் பரிசளித் தால் போதும்; அவர்களிடமிருந்து என்ன வேண்டுமா யினும் வாங்கிக் கொள்ளலாம்" என்று கூறியவாறே, தான் வாங்கிய நிலத்தின் விற்பனைப் பத்திரத்தை வியாபாரி எடுத் துக் காண்பித்தான்.

வியாபாரி பின்னும் சொல்லுகிறான் :—"அவர்களெல் லாம் ஆட்டுக் கூட்டம் போலச் சூது வாது தெரியாதவர்கள், சுத்த ஏமாளிகள்; அவர்களைத் தாஜா பண்ணினால் போதும்; காசில்லாமற்கூட எதையும் பெற்றுவிடலாம். நான் வாங்கியுள்ள நிலங்கள் நல்ல அயனான நிலங்கள்; நதி யோரம்."

பிக்கன் தனக்குச் சுக்கிரதசை பிறந்து விட்டதாக எண் ணினான். "பிச்சைக் காரத்தனமான 1500 ஏகர்களுக்காக

3000 ரூபாயை இங்கு என் கொட்டிக் கொடுக்க வேண்டும்? பாஸ்கர தேசம் போய் விட்டால் இதே பணத்திற்கு 15,000 ஏகர்களுடைய பெரிய எஸ்டேட்டுக்கே நாம் எஜமானுகி விடலாமே'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

## பாஸ்கர தேசப் பிரவேசம்

வியாபாரி போன பிறகு பிக்கன் பாஸ்கர தேசத்திற்குப் புறப்பட ஆயத்தமானுன். மனைவி மக்களை வீட்டில் விட்டு விட்டுத் தானும், தனது வேலையாள் ஒருவனுமாக நகரத்திற்குச் சென்று டீயும், மதுவும், மற்ற வியாபாரி சொன்ன பரிசுகளும் வாங்கி வந்தான். கடைசியாக இருவரும் 7 நாள் பிரயாணத்திற்குப் பிறகு பாஸ்கர தேசம் போய்ச் சேர்ந்தனர். அங்கு எல்லாம் வியாபாரி சொன்னபடியே இருந்தது. அவ்வூர் ஜனங்கள் நதிக்கரையில் கட்டப்பட்டிருக்கும் தோல் கூடாரங்களில் வசித்து வந்தனர். அவர்கள் உழுவதும் இல்லை; விதைப்பதும் கிடையாது; மந்தை மந்தையாய் ஆடு மாடு மேய்ப்பர். பால்தான் அவர்களுக்கு முக்கியமான ஆகாரம், பாலைக் கடைந்து ஏதோ ஓர் மது உற்பத்தி செய்கிறுர்கள். அவர்கள் பெரும்பாலும் சாப்பிடுவது மாம்ஸம்; குடிப்பது டீயும், மதுவும்; நேரம் போக்குவது சங்கீதத்தில். எப்படியென்றுலும் அவர்கள் யாவரும் 'குஷி'யான ஜனங்கள்; துன்பமே அறியாதவர்கள். வருஷமுழுவதும் அவர்களுக்கு ஒய்வு தான். அவர்கள் படிப்புப் பூஜ்யம்; எனினும் எல்லோரிடமும் சரசமாய் நடந்து கொள்வர்.

பிக்கனைப் பார்த்தவுடன் அவர்கள் தங்கள் தோல் கூடுகளை விட்டு விட்டு இப் புது விருந்தினரைச் சூழ்ந்து கொண்டனர். நல்ல வேளையாக அங்கோர் துபாஷ் அகப்பட்டான். அவனிடம் பிக்கன் தான் நிலம் வாங்க வந்திருப்பதாய்க் கூறினுன். அவ்வளவுதான், ஜனங்களுடைய சந்தோஷத்திற்கு எல்லையில்லை. அவர்கள் பிக்கனைத் தழுவிக்கொண்டனர். அவனைத் தங்கள் தோல் வீடுகளில் ஒன்றுக்கு அழைத்துச் சென்று, அங்கோர் வெல்வெட் தைத்த ரத்தின கம்பளத்தில்

அவனை அமர்த்தி, டீயும், மதுவும் கொடுத்தனர். ஒரு ஆட்டை வெட்டி ஆகாரம் படைத்தனர். பிக்கனும் தன்னுடைய பரிசுப் பொருள்களை எல்லோருக்கும் தாராளமாய் விநியோகம் செய்தான். பிறகு பாஸ்கரக்காரர்கள் தங்களுக் குள்ளேயே ஏதோ பேசிக் கொண்டவர்களாய்த் துபாஷிடம் என்னவோ சொன்னார்கள்.

"உங்களுடைய பரிசுகளால் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். ஏதாவதொரு வகையில் தங்களுக்கு அளிக்கப்பட்ட பரிசைத் திருப்பிக் கொடுத்தால்தான் அவர்கள் மனம் சாந்தமடையும். இம்முறையில்தான் அவர்கள் விருந்தினர்களை நடத்துகின்றார்கள். நீங்கள் உங்களுடைய பரிசைக் கொடுத்து விட்டீர்கள்; உங்களுக்கு அவர்களிடமுள்ள பொருள்களில் என்ன தேவை? என்று என்னைக் கேட்கச் சொல்லுகிறார்கள்" என்று துபாஷ் பிக்கனிடம் கூறினான்.

"நான் குறிப்பாக உங்களிடம் கேட்க வந்தது கொஞ்சம் நிலபலங்கள். எங்கள் ஊரில் போதுமான நிலங்கள் இல்லை; இருப்பவையும் வேறு ஆள்களால் பயிர் செய்யப்பட்டு விட்டன. உங்களிடமோ சாகுபடியாகாமல் கண்ணுக்கெட்டிய தூரம் நிலங்கள் காலியாய்க் கிடக்கின்றன.—அதுவும் இவைகளெல்லாம் ரொம்ப நல்ல நிலங்களாயும் இருக்கின்றன" என்று பிக்கன் களிப்புடன் கூறினான்.

துபாஷ் இதைப் பாஸ்கரர்களுக்கு மொழி பெயர்த்துச் சொன்னான். அவர்கள் தங்களுக்குள்ளேயே கூடிக் கூடிப் பேசலாயினர். பிக்கனுக்கு அவர்கள் பேச்சு அர்த்தமாகவில்லை. எனினும் எல்லோரும் சந்தோஷத்தோடு சிரித்துக் கொண்டதை மட்டும் கவனித்தான். கடைசியாக அவர்கள் பிக்கன் பக்கம் திரும்பினர். துபாஷ் பேசலானான்.

"உம்முடைய அன்பான பரிசுகளுக்குப் பதிலாக உமக்கு எவ்வளவு நிலம் வேண்டுமோ அவ்வளவு நிலத்தையும் கொடுக்கத் தயாராயிருப்பதாய் என்னைத் தெரிவிக்கச் சொல்லுகிறார்கள். உம் கையால் எவ்வளவு நிலம் வேண்டும்

என்பதைக் குறிப்பிடும்; அவ்வளவுதான்; அவை உமக்கு உடனே கொடுக்கப்படும்"

இந்தச்சமயத்தில் திரும்பவும் ஜனங்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொள்ள லாயினர். அவர்கள் ஏதோ ஒரு விஷயத்தில் மாறுபடுவதாகத் தோன்றியது. "அது என்ன?" என்று பிக்கன் கேட்டதற்கு, துபாஷ் கூறினன்:—"சிலர் தலைவனைக் கேட்டுக் கொண்டுதான் நிலம் தர முடியும் என்றும், வேறு சிலர் இவ்விஷயத்தில் தலைவரின் அனுமதி தேவை யில்லை யென்றும் வாதிக்கிறார்கள். அவ்வளவுதான்."

## 'பகலொன்றுக்கு 3000 ரூபாய்'

பாஸ்கர தேசக்காரர்கள் இவ்வாறு வாதாடிக்கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று ஒருவன் அந்தத் தோல் கூடாரத்திற்குள் புகுந்தான். அவன் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்த உடை அணிந்திருந்தான். அவன் வந்தவுடன் எல்லோரும் மரியாதையாய் எழுந்து நின்றனர். பிக்கனிடம் துபாஷ் "அவர்தான் இந்தக் கூட்டத்தின் தலைவர்" என்று தெரிவித்தான். உடனே பிக்கன் தன்னிடமுள்ள மிக மிக ருசியான மதுவையும், 5 பவுண்டு டீயையும் அந்தப் புது ஆளுக்குப் பரிசாக வணக்கத்தோடு கொடுத்தான். அவனும் அதை ஏற்றுக் கொண்டவனாய் அங்குள்ளதோர் மிக உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்தான். பாஸ்கரர்கள் அவனிடம் வரிசையாய்த் தங்கள் குறைகளை யெல்லாம் கூறிக்கொண்டனர். அதை யெல்லாம் அத்தலைவன் சாவதானமாய்க் கேட்ட பின் அவர்களுக்கு ஏற்றவாறு பதில் சொன்னான்.

கடைசியாகப் பிக்கனைப்பார்த்து, "சரி உமக்கு எவ்வளவு நிலம் தேவையோ அதைச் சுட்டிக்காட்டும். உண்மையாகவே எங்களிடம் அதிகமான நிலம் இருக்கிறது" என்று கூறினன்.

"ஆ! எனக்கு இஷ்டமான அளவு நிலம் இவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். என்றாலும் இதை நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும். இன்று இந்த நிலமெல்லாம்

உனக்கென்று கொடுத்து விட்டு நாளைக்கே பிடுங்கிக் கொண்டால் என்ன செய்வது?" என்று பிக்கன் தனக்குத்தானே யோசித்தான்.

"தங்களுடைய கருணைக்காக வந்தனம். உங்களிடம் நிலம் நிரம்ப இருக்கிறது; எனக்கோ கொஞ்சம் தேவை. ஆனால் எந்தப் பாகம் எனக்குச் சொந்தம் என்பதை எப்படி நிர்ணயிப்பது? அதற்கு ஏதாவது அளவு உண்டா? அளந்து கட்டிய நிலம் என்னுடையதுதான் என்பதற்கு ஏதாவது எழுத்து மூலமான ஆதாரங்கள் வேண்டாமா? உங்கள் மேலுள்ள அவநம்பிக்கையால் நான் இவ்வாறு சொல்ல வில்லை. ஆனால் எதற்கும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன். நம்முடைய வாழ்வும் தாழ்வும் நம் கையி லில்லை—அவைகளைப் பற்றி ஆண்டவனுக்குத்தான் தெரியும். நீங்கள் நல்லவர்கள்தான். ஆனால் உங்களுடைய சந்ததியார்கள் இவற்றைப் பிடுங்கிக் கொண்டாலும் பிடுங்கிக் கொள்ளலாம்"—இதுதான் பிக்கன் வெளிப்படையாகக் கூறியது.

தலைவன் புன்சிரிப்புக் கொண்டான்.

"இந்தச் சபைதான் உமக்கு நிலங்கொடுப்பதை நிச்சயம் செய்வது. இதைக் காட்டிலும் உயர்ந்த ஆதாரம் உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"சிறிது நாளைக்கு முன் ஒரு வியாபாரி உங்களிடம் நிலம் வாங்கியதாகவும், அவனுக்கு எழுத்து மூலமான பத்திர மொன்று நீங்கள் எழுதிக் கொடுத்திருப்பதாகவும் கேள்விப் பட்டேன். அது வாஸ்தவந்தானே? தயவு செய்து எனக்கும் அம்மாதிரியே ஒரு பத்திரம் எழுதிக் கொடுத்தால் போதும்" என்றான் பிக்கன்.

இப்போதுதான் தலைவனுக்கு விஷயம் விளங்கிற்று.

"ஓ! அதுவா? அப்படியே செய்து விடுகிறோம். எங்களிடம் ஒரு குமாஸ்தா இருக்கிறான். அவனை எழுதச் சொல்லுகிறேன். நாளையதினம் நகரத்துக்கு ஆளனுப்பி

வேண்டிய முத்திரைகளை வாங்கிவரச் சொல்லுகிறேன்" எனத் தலைவனும் ஒப்புக்கொண்டான்.

"அதெல்லாம் சரிதான், உங்கள் நிலத்தின் விலை யென்ன?" என்று பிக்கன் கேட்டான்.

"விலையா, பகலொன்றுக்கு 3000 ரூபாய்" என்று தலைவன் பதில் கூறினன்.

இந்தப் பகலொன்றுக் கணக்கு, பிக்கனுக்கு விளங்கவில்லை. ஆகவே திரும்பவும்,

"3000 ரூபாய்க்கு எவ்வளவு ஏகர் நிலம் கிடைக்கும்?" என்று விசாரித்தான்.

"நாங்கள் அந்த வகையில் கணக்கிடுவ தில்லை. பகல் கணக்கில்தான் நாங்கள் நிலங்கள் விற்பது. அதாவது 3000 ரூபாய்க்கு, ஒரு மனிதன், உதயம் முதல் அஸ்தமனம் வரையில் எவ்வளவு நிலத்தைச் சுற்றி வருகிறனே அவ்வளவு நிலத்தையும் அவனுக்கே கொடுத்து விடுகிறோம்."

பிக்கன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனன்.

"என், ஒரு பகலில் ஒரு மனிதன் எவ்வளவோ மைல் கணக்கான நிலங்களை யெல்லாம் சுற்றி வந்துவிடுவானே?!" என்று கேட்டான்.

தலைவன் திரும்பவும் புன்னகை கொண்டான்.

"வாஸ்தவம். அவ்வளவு நிலமும் சுற்றினவனுக்கே சொந்தம். ஆனல் ஒரேயொரு நிபந்தனை உண்டு—அதாவது நிலம் வாங்குபவன் காலையில் எந்த இடத்திலிருந்து சுற்ற ஆரம்பிக்கிறனே அதே யிடத்திற்கு மாலைக்குள் திரும்பி வந்து விட வேண்டும்; இல்லாவிடில் அவன் பணம் பறிமுதல் செய்யப்படும்" என்று விளக்கினன் தலைவன்.

"அது சரி, ஆனல் சுற்றுவதற்கு ஆரம்ப ஸ்தானத்தை எப்படி நிச்சயிக்கிறீர்கள்?" என்று பிக்கன் கேட்டான்.

"நீர் குறிப்பிடும் இடத்தில் நாங்கள் நின்று கொள்ளுகிறோம். எங்கள் ஆள்களில் இருவர் உம்மைப் பின் தொடர்வார்கள். நீங்கள் போகும் வழியில் எங்கெங்கு உமக்கு இஷ்டமோ அங்கெல்லாம் அவர்கள் எல்லைக் கற்கள் நடுவார்கள். பிறகு அவைகளைக் கொண்டு உம்முடைய நிலத்தின் வரம்பு கட்டப்படும். நீர் எவ்வளவு பெரிய வட்டம் போட்டாலும் சரி, அவ்வளவு நிலமும் உமக்கே சொந்தம்; ஆனால் அஸ்தமிப்பதற்குள் புறப்பட்ட இடத்திற்கு வந்து விட வேண்டும்" என்று தலைவன் பதில் சொன்னான்.

பிக்கன் சந்தோஷத்தோடு இதற்கு ஒப்புக் கொண்டான்; மறுநாள் அதிகாலையிலேயே அவன் நிலம் அளக்கப் புறப்படவேண்டுமென்று ஏற்பாடு. அப்புறம் அக்கூட்டத்தில் உள்ளவர்கள் பேசிக்கொண்டே அமிதமாக மதுவைக் குடித்தனர், மாம்ஸம் சாப்பிட்டனர். அதற்கு மேல் டீ போட்டனர்—இவ்வாறு இரவு வரையில் காலம் கடத்தினர். அன்றிரவு பிக்கனுக்கு ஒரு நல்ல படுக்கையை அமைத்துக் கொடுத்தனர். பிறகு எல்லோரும் விடை பெற்றுக்கொண்டு மறுநாள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேருவதாகக் கூறி விட்டுச் சென்றனர்.

## கனவிலே கண்ட கடூரக் காட்சிகள்

பிக்கனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் கண் முன்னால் தான் பெரிய முதலாளியாயிருக்கும் காட்சியே அடிக்கடி தென்பட்டது.

"நாளையதினம் ஒரு பெரிய பரந்த நிலப்பரப்பு என் சொந்தமாகப் போய்விடும்"—இப்படி நினைக்கும் பொழுதே அவனுக்கு ஆசை பொங்கியது.—"ஒரு நாளைக்கு என்னால் எப்படியும் 50 மைலாவது நடக்க முடியும். 50 மைல் நடந்தால் சுமார் 30,000 ஏகர்களைச் சுற்றிவிடலாம். அப்புறம் நாம் யாருக்கும் தலை குனிய வேண்டியதில்லை. எனக்குக் கீழ் எத்தனையோ வேலையாட்களை வைத்துக்கொண்டு 'ஜம்' மென்று வாழலாம். பாதியைப் பயிர் செய்தும், பாதியைத்

தரிசாய்ப் போடவும் முடியும்; ஆடு மாடுகளுக்கும் தீனிக்கு அலைய வேண்டியதில்லை" இவ்வாறு கணக்குப் போடுவதிலேயே அவ்விரவு முழுமையும் கழிந்தது.

விடியற்காலம் பிக்கன் சிறிது நேரத்திற்குக் கண்ணயர்ந்தான். அவ்வளவுதான்; ஒரு அதிசயமான கனவொன்று கண்டான். தான் படுத்திருக்கும் தோல் கூடாரத்துக்கு வெளியே யாரோ பேசுவதும், சிரிப்பதுமாய்க் கேலி செய்வதுபோல் தோன்றியது. யாரென்று பார்க்க வெளியே ஓடினான். ஒரு பக்கத்தில் பாஸ்கர நாட்டவர் தலைவன் உட்கார்ந்து கொண்டு சந்தோஷத்தினால் தலைகால் தெரியாமல் ஆடிக்கொண்டிருப்பதைப் பார்த்தான். என்ன விஷயமென்று தெரிந்துகொள்வதற்காக அவ்விடத்திற்குச் சென்றான். ஆ! என்ன ஆச்சர்யம்! அங்கு தலைவனில்லை; அவனுக்குப் பதில் தனக்குப் பாஸ்கர தேசத்தைப் பற்றிச் சொன்ன வியாபாரி அங்கிருப்பதைக் கண்டான். "என்னைத் தங்களுக்கு நினைவிருக்கிறதா? கொஞ்ச நாளைக்கு முன் தாங்கள் என் வீட்டிற்கு வரவில்லையா?" என்று கேட்க வாயெடுத்தான். அவ்வளவுதான், அவ்வுருவம் இவனது சொந்த ஊரில் ஒருநாள் விருந்தினனாய் வந்து குடியேற்ற நாட்டைப் பற்றிக் கூறிய வழிபோக்கனாய் மாறிவிட்டது. ஆ! அவன் அவ்வழிப்போக்கனுமல்ல; அடடா என்ன கோரம்; அவ்வழிப்போக்கனுக்குப் பதில் நீண்ட கொம்புகளோடும், நகங்களோடும், பயங்கர ஸ்வரூபமாய், எதையோ உற்றுப் பார்த்த வண்ணம் சனிபகவான் நின்றான். "அவன் எதை அவ்வளவு உன்னிப்பாய்ப் பார்க்கிறான்; என் இவ்வளவு குதூகலமாய்ச் சிரிக்கிறான்?" என்று யோசித்தவாறே பிக்கன் ஒருபக்கம் ஒதுங்கிக் கீழே எட்டிப் பார்த்தான். அங்கு தரையின்மேல் சனிபகவானுக்குப் பக்கத்தில் ஒரே கோவணமும், மேல் சட்டையும் மட்டுமுள்ள ஒரு மனித உருவம் நெடுஞ்சாங்கிடையாய் மண்ணில் விழுந்து கிடந்தது. அதன் முகம் வெள்ளை வெளேரென்று வெளுத்துப்போயிருந்தது. கொஞ்சம் அவ்வுருவத்தின் பக்கத்தில் போய்ப் பார்த்தான். ஆ! அம்மனித உருவம் பிக்கனின் உருவமே."

"ஐயோ!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு பிக்கன் தூக்கத்திலிருந்து எழுந்தான்; அக்கனவு முழுமையும் தத்ரூபம் உண்மைபோல் அவனுக்குத் தோன்றியது. சூரியோதய சமயம். அப்போதுதான் அவனுக்குத் தெளிவுண்டாயிற்று.

"ஆ! நேரமாய்விட்டது. நான் மற்றவர்களையும் எழுப்ப வேண்டும்" என்று கூறிக்கொண்டான்.

## ஆசைக்கு அளவில்லை

எல்லோரும் ஒரு குறிப்பிட்ட இடத்திற் கூடினர். தலைவன் தன்னுடைய தொப்பியை அங்கிருந்த ஒரு கம்பத்தின் மேல் அடையாளமாக வைத்தான். இதிலிருந்துதான் பிக்கன் தன் நிலத்தைக் கால் நடையாய் அளந்துகொள்ள வேண்டும். பணத்தை அந்தத் தொப்பியில் போட்டுவிட வேண்டும்.

எல்லோரும் டீ சாப்பிட்டனர்; பிக்கனையும் கொஞ்சம் ஆகாரம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினர். பிக்கன் இசையவில்லை: "இங்கே சாப்பாட்டைக் கவனித்துக்கொண்டிருந்தால் அப்புறம் ஒரேயடியாய் நேரமாகிவிடும்" என மறுத்து விட்டான்.

கீழ்வானத்திலே சூரியனது முதற்கிரணம் வெளிப்பட்டதோ இல்லையோ, அவ்வளவுதான், பிக்கன் 3,000 ரூபாயையும் தலைவனது தொப்பியில் கொட்டினான். தன்னுடைய மேலங்கி, உட்சட்டை எல்லாவற்றையும் கழற்றி விட்டு, இடுப்புப்பட்டையை இறுக்கிக் கொண்டு, தோளில் ஓர் தோல் பையில் தாகத்திற்கு ஜலமும், மற்றொன்றில் ரொட்டித் துண்டுகளும் எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான். பாஸ்கர்காரர்கள் இருவர் அவனைக் குதிரை மேல் பின் தொடர்ந்தனர். 'நேரமாய் விடக்கூடாது. வெய்யிலேறுவதற்கு முன்பே நாம் அதிக தூரம் நடந்து விட வேண்டும்" என்று பிக்கன் சொல்லிக் கொண்டான்.

ஆ! நில மென்றால் அது வல்லவா நிலம்! கண்ணுக்

கெட்டினதூரம் பச்சைப் பசேலென்று மார்பளவு பசும்புல் வளர்ந்திருந்தது: நல்ல உறுதியான களிமண் பூமி. பாஸ்கரர்கள் தலைவனும் "நீர் இவ்விடத்திலிருந்து புறப்பட்டு மாலை அஸ்தமனத்திற்குள் இவ்விடத்திற்கே திரும்பி வந்து விட வேண்டும். இங்கு உம்முடைய வேலையாள் எங்களோடு உம்முடைய பணத்திற்குக் காவலாக இருப்பான். போய் வருவீராக" என்று உத்தரவு கொடுத்தான்.

பிக்கன் கிழக்கு நோக்கி நடக்க ஆரம்பித்தான்—சாதாரணமான நடை; அதிக வேகமுமில்லை, மெள்ளவுமில்லை ஒரு மைல் தீர்ந்தவுடன் அங்கோர் எல்லைக்கல் நடச்சொன்னான். திரும்பவும் நடை; இப்போது கொஞ்சம் தாராளமாக அடியெடுத்து வைத்தான்; முதலிலிருந்த தசைப்பிடிப்பு விட்டு விட்டது. ஏனெனில், நடை சகஜமாய்ப் போயிற்று. அடுத்த மைலில் ஒரு எல்லைக்கல் நடப்பட்டது. இவ்வாறே நாலைந்து மையில்கள் போய் விட்டான். சூரியன் அப்போது தான் குன்றுகளின் முகடுகளைத் தொடும்படியான சமயம். மற்றுமோர் ஐந்து மைல் நடந்தான். மணி 9 ஆகிவிட்டது, பாஸ்கரர்கள் காலை ஆகாரம் சாப்பிடும் நேரம். உண்மையில் வெய்யில் தாங்க முடியாதபடி உக்ரமாய் இருந்தது. "அடுத்த 5 மைலையும் தாண்டி விட்டோமானால் அப்போது வேண்டுமாயின் அள்ளையில் திரும்பலாம். இன்னும் அதற்கு நேரமிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டான். போகப் போக நிலம் அதிக செழிப்பானதாய்த் தோன்றியது. ஆகவே அக்கம் பக்கம் திரும்பாமல் நேராகப் பிக்கன் போய்க் கொண்டிருந்தான். இவன் புறப்பட்ட இடத்திலுள்ள கம்பம் முக்கால் வாசி மறைந்து விட்டது. அந்த மேட்டிலிருந்த ஜனங்கள் கறுப்பு எறும்புக் கூட்டம் போல் தோன்றினர்.

"சரி, போதுமான அளவு நீளத்தில் நடந்தாய்விட்டது; இனிமேல் அகல வாக்கில் திரும்பவேண்டும்" என்று கூறிக் கொண்டே அவ்விடத்தில் ஒரு எல்லைக்கல்லை நடச்சொன்னான். அவன் உடலில் வியர்வை தாரை தாரையாய் வழிந்து கொண்டிருந்தது; தாகம் பொறுக்க முடியவில்லை; தன்னு

டைய தோற்பையிலிருந்த ஜலத்தைக் குடித்தான். பின்னர் இடது கைப்புறம் திரும்பி நேரே நடக்க ஆரம்பித்தான். பொறுக்கமுடியாத வெய்யில்; ஆளை முழுக்கடிக்கும் கதிர்கள். அவனது கை கால்கள் ஓய்ந்து போயின. சூரியன் வானத்தின் மத்திக்கு வந்து விட்டான். நடுப்பகல் போஜன வேளை; பிக்கனுக்கோ அபாரமான பசி. "இங்கு சிறிது ஓய்வெடுத்துக் கொண்ட பிறகு தான் மேலே நடக்க வேண்டும்" என்று ஒரு இடத்தில் நின்றவாறே தன் தோற்பையிலுள்ள ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டான். "உட்கார்ந்து கொண்டால் சாயச் சொல்லும்; சாய்ந்தால் தூங்கிப்போய் விடுவோம்" என்பது பிக்கனின் எண்ணம். கால்வலி சிறிது நீங்கியவுடன் திரும்பவும் நடக்க ஆரம்பித்தான். முதலில் நடப்பது அவ்வளவு சிரமமாகத் தோன்ற வில்லை; ஏனெனில் ஆகாரம் அவனது நரம்புகளுக்கு ஒரு புதுப்பலத்தைக் கொடுத்தது. எனினும் சூரியன் போகப் போக மகா உக்கிரத்தோடு அனலைக் கொட்டியது. பிக்கனுடைய மூட்டுகளெல்லாம் வலி யெடுத்தன. 'ஒரு மணி நேரத்துன்பம் ஒரு நூற்றாண்டுக்கு இன்பமாய் முடியலாம்' என்று சொல்லிக் கொண்டே பிக்கன் மேலும் மேலும் நடக்கலானான்.

இவ்வாறு சளைக்காமல் 10 மைல் போய் விட்டான். இனி நாம் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பவேண்டும் என்று நினைத்தான். திரும்பிய அந்த மூலையில் ஒரு அபூர்வமான செழிப்புள்ள நிலம் தென்பட்டது. "ஆ! அதில் நல்ல சணல் உற்பத்தி செய்யலாமே" என்று பிக்கன் யோசித்தான். "வந்தது வந்தோம். அதையுந்தான் சுற்றிக் கொண்டு போகலாமே" என்பது அவன் எண்ணம். ஆகவே திரும்பாமல் அப்புது நிலத்தின்முடிவுவரை நேராகச் சென்றான். அவன் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பும் போது மணி 3 இருக்கும். கூடிய வரையில் பிக்கன் வேகமாகவே நடந்தான். இன்னும் 13 மைல்கள் அஸ்தமிப்பதற்குள் அவன் நடந்தாக வேண்டும்.

## முடிவு

அவ்வளவுதான். ஓட்டமும் நடையுமாய்ப் பிக்கன் ஆரம்ப ஸ்தலத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறுன். அவனுடைய கால்கள் கீறுண்டு இரத்தம் வடிந்தது; மூட்டுகள் வலிக்க ஆரம்பித்தன. கொஞ்ச நேரம் ஓய்வுக்காக அவன் எதை வேண்டுமாயினும் தியாகம் செய்திருப்பான். ஆனுல் அஸ்தமனத்திற்குள் தொப்பிக் கம்பத்தைப் போய்த் தொட்டாகவேண்டுமே. எதை வேண்டுமானுலும் காக்க வைக்கலாம்; ஆனுல் சூரியன் காக்கமாட்டானே. இவ்வெண்ணம் அவனைச் சவுக்காலடித்து ஓட்டுவதுபோல் இருந்தது. அடிக்கடி அவன் தேகம் பலஹீனத்தால் தள்ளாடியது. "ஐயோ! நாம் தப்பிதமாகக் கணக்குப் போடவில்லையே. இன்னும் போகவேண்டியதூரம் அதிகமாயிருக்கிறதே. என்னுடைய பணமும், உழைப்பும் வீணுய் விடுமோ என்னமோ? எதற்கும் நம்மாலானதை நாம் செய்வோம்" என்று தேறுதல் கூறிக்கொண்டான்.

பிக்கன் ஓட ஆரம்பித்து விட்டான். அவன் கால் தசைகளெல்லாம் கிழிந்துபோய் ரத்தம் வழிந்தது; என்றுலும் பிக்கன் நிற்கவில்லை. ஒரே ஓட்டமாய் மேலும் மேலும் ஓடினுன். தன்னுடைய வேஷ்டி துணிஎல்லாவற்றையும் தூக்கியெறிந்தான்; கோவணமும், ஒரு பனியனும்தான் வியர்வையினுல் உடம்போ டுடம்பாய் ஒட்டிக்கொண்டிருந்தன. "ஆ! என்ன முட்டாள்தனம்? நான் யாவற்றையும் இழந்துவிட்டேன். அஸ்தமனத்திற்குள் அவ்விடத்திற்குப் போக முடியாது"—இந்த எண்ணம் அவனைப் பைத்தியக்காரனுக்கிற்று. உதடுகள் உலர்ந்துபோயின. மார்பிரண்டிலும் கொல்லனது துருத்தியைப்போல் பெருமூச்சுப் பொங்கியது. இருதயத்தில் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல் இருந்தது. கால்கள் முறிந்து விடும்போல் தோன்றின. சில சமயங்களில் காலே தனக்குச் சொந்த மில்லாது போனதுபோல் இருக்கும்.

இப்போது அவனுக்கு நிலத்தைப் பற்றிக் கவலையில்லை, எங்கு நாம் களைப்பினுலேயே இறந்துவிடுவோமோ என்ற

பயந்தான். எனினும் இவ்வளவு தூரம் முனைந்துவிட்ட பிறகு பின் வாங்குவது கேவலம்; பார்த்தவர்கள் கேலி செய்ய மாட்டார்களா? இவ்வாறு நினைத்துக் கொண்டிருக்கும் போதே, மேட்டில் இவனது வருகைக்காகக் காத்திருக்கும் பாஸ்கரர்களின் உற்சாக வார்த்தைகள் இவன் காதில் விழுந்தன. அது இவனுக்கோர் புது வலிவை கொடுத்தது. தனது மிச்சமுள்ள சக்தியையெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து ஒரேயடியாய் மேட்டை நோக்கிப் பாய்ந்தான். மேட்டின் அடிக்கு வந்தாய்விட்டது. சூரியனும் அஸ்தமன கிரியில் முழுகப் போகிறுன். அவன் மறைவதற்குள் குறிப்பு ஸ்தம்பத்தைத் தொட்டாக வேண்டும். மேலிருந்து பாஸ்கரர்கள் வா வா என்று அவனைக் கைக்காட்டி அழைத்தனர். தலைவனும், கம்பமும், தொப்பியும் நன்கு தெரிந்தன. "இந்தக் களைப்பு மட்டும் என்னைக் கொல்லாதிருந்தால், ஆ! நான் எவ்வளவு ஏக்கர் நிலத்திற்கு அதிபதியாய் இருப்பேன்! எனக்கென்னவோ பிழைக்க முடியுமென்று தோன்றவில்லை" என நினைத்தான். எனினும் அவன் நிற்கவில்லை. தலை தெறிக்க, மூச்சுத்திணற வேகமாய் ஓடினுன். சூரியன் வானத்தின் கீழ் மறைந்து கொண்டிருக்கிறுன்; ஆயிற்று, இன்னும் ஒரு கணத்தில் பூராவும் மறைந்து விடுவான் அச்சமயத்தில், ஆ! பிக்கன் கம்பத்தருகில் வந்து திடீரெனக் கீழே விழுந்தான். விழும்போதுகூடக் கையைக் கம்பத்தை நோக்கியபடி நீட்டிக்கொண்டேதான் சாய்ந்தான். சூரியன் மறைவதற்கும், முன் நீட்டிய இவன் கரம் கம்பத்தைத் தொடுவதற்கும் சரியாய் இருந்தது. அவ்வளவு நிலமும் பிக்கனுக்குச் சொந்தமாய் விட்டது.

"ஓ! இளைஞனே, எழுந்திரு, உன்னுடைய ஓட்டத்தை மெச்சினேன்; இவ்வளவு நிலமும் உனக்கே சொந்தம்" என்று தலைவன் கூறினுன்.

பிக்கனுடைய வேலையாள் தன் எஜமானுக்கு உதவி செய்வதற்காக ஓடினுன். ஆ! அங்கு பிக்கன் வாயிலும், மூக்கிலும் ரத்தம் கக்கிக்கொண்டு பிணமாய்க் கிடந்தான்.

"ஐயோ!" என்று வேலையாள் கதறினன். பாஸ்கரத் தலைவன் குதூகலமாய்ச் குறும்புச் சிரிப்புச் சிரித்தான்.

கடைசியாக அங்கிருந்த ஓர் மண் வெட்டியை வேலையாளிடம் கொடுத்து, "எஜமானைப் புதைத்து விடு" என்று உத்தர விட்டான்.

பாஸ்கரர்கள் கலைந்து போய் விட்டார்கள். வேலையாள் மட்டுமே தனியாயிருந்தான். என்ன செய்வது? பிக்கனது உயரத்திற்குச் சரியாய்க் குழிதோண்டி வேலையாள் தன் எஜமானைப் புதைத்து விட்டான்.

அக்குழியின் நீளம் ஆறடி; பிக்கனின் உயரமும் ஆறடி.

---

O142,3MTL,A.
31N35

121267

# விதை முட்டை

ஒரு நாள் மாலை ஒரு மலை அடிவாரத்தில் சில குழந்தைகள் ஒரு கோழி முட்டை போன்ற வஸ்துவைக் கண்டெடுத்தனர். அதன் நடுவில் தானிய வித்துக்களுக்கு இருப்பது போல் ஒரு அழகான கீறல் இருந்தது. ஒரு வழிப் போக்கன் காலணுக்கொடுத்து அதைக் குழந்தைகளிட மிருந்து வாங்கிக் கொண்டான். அவ்வூர் ராஜாவிடம் அவ்வதிசயமான வஸ்துவை ஒரு பெருந்தொகைக்கு விற்றான்.

ராஜா தன் சமஸ்தானத்துப் பண்டிதர்களை யெல்லாம் வரவழைத்தார்; அவ்வபூர்வ வஸ்து தானியமா? அல்லது முட்டையா? என்பதை நிர்ணயிக்கும்படி கேட்டுக்கொண்டார். பண்டிதர்கள் கூடிக்கூடி யோசித்தார்கள்; திரும்பத் திரும்ப ஆராய்ச்சி செய்தார்கள்—என்ன செய்தும் உண்மை விளங்கவில்லை.

கடைசியில் அதை ஓர் மாடத்தில் போட்டுவிட்டுப் பண்டிதர்கள் போய் விட்டனர்; ஒரு பெட்டைக் கோழி வந்து அதைக் கொத்திக் கொத்தி ஒரு சிறிய துவாரம் உண்டாக்கி விட்டது. அந்தத் துவாரத்தின் வழியாக உள்ளே பார்த்ததில் அது ஓர் தானியமே என்பது வெளியாயிற்று.

ராஜாவுக்கு ஆச்சரியமாய்ப் போயிற்று; சமஸ்தானப் பண்டிதர்களைப் பார்த்து, இந்த மாதிரி தான்யம் எப்போது, எவ்விடத்தில் பயிர் செய்யப்பட்டது என்பதைக் கண்டு பிடிக்கும்படி உத்தரவிட்டார். பண்டிதர்கள் ஆலோசித்தார்கள், வாதித்தார்கள், புஸ்தகங்களை யெல்லாம் புரட்டிப் பார்த்தார்கள்—பயன் படவில்லை; கடைசியாக ராஜாவிடம் வந்து "அரசே! எங்களுக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை; ஏனெனில், எங்கள் புஸ்தகங்களில் இந்த மாதிரியான

தான்யத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூடக் கிடையாது. நமது நாட்டுக் கிழக் குடியானவர்கள் யாரையாவது விசாரித்தால் ஒரு வேளை அவர்களுள் யாருக்காவது இதைப்பற்றித் தெரிந் திருக்கலாம்'' என்று கூறிவிட்டார்கள்.

ஆகவே தன் நாட்டிலுள்ள மிகவும் வயதான கிழத் தாத்தாவைக் கண்டு பிடித்துக்கொண்டு வரும்படி ராஜா ஆக்ஞையிட்டார். அந்தகைய கிழவர் ஒருவரைத் தேடிப் பிடித்து அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினர். அவர் தோலெல்லாம் சுருங்கிப்போன தொண்டுக் கிழம்; பல்லே சுத்தமாய்க் கிடையாது; இரண்டு கவைக் கோல்களை ஆதார மாகக் கொண்டு அவர் நடந்து வந்தார்.

அவ்விதையை அவருக்குக் காண்பித்தனர்; அவருக்கும் அது ஓர் ஆச்சரிய வஸ்துவாய்த்தான் தென்பட்டது; அது மாதிரி தான்யத்தை அவர் அது வரையில் பார்த்ததே யில்லை. போதாக் குறைக்கு கண் வேறு கொஞ்சம் குருடு; கண்ணால் பாதியும் கையால் பாதியுமாக அவர் அத்தான்யத்தை ஆராய்ந்து பார்த்தார். ராஜா கேட்டார்:—

“ஒய்! பெரியவரே! இம்மாதிரி விதை எங்கு விளைகிற தென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்போதாவது இத்தகைய விதையை விதைத்ததுண்டா? அல்லது யாரிட மாவது விலைக்கு வாங்கினதுண்டா?''

அந்தக் கிழவருக்குக் காதும் கொஞ்சம் மந்தம்; ஆகவே வெகு நேரம் கத்தின பிறகுதான் அவரிடமிருந்து பதில் பெற முடிந்தது, அவர் சொன்னார். “எனக்கும் வயது தொண்ணூறு ஆய்விட்டது; என்றாலும் என் வாழ் நாளில் ஒரு தடவைகூட இவ்வளவு பெரிய விதையை நான் விதைத் தது மில்லை; அறுவடை செய்தது மில்லை; விலைக்கு வாங்கின தும் கிடையாது. ஆனால் என்னுடைய தகப்பனார் நல்ல உலகானுபவம் உடையவர்; அவருக்கு ஒரு வேளை இவ விஷயம் தெரிந்திருக்கலாம்''

ஆகவே ராஜா இக்கிழவனின் தந்தைக்குச் சொல்லி அனுப்பினர்; அவரும் வந்து சேர்ந்தார். அவர் ஒரேயொரு கவைக் கோலை மட்டுமே ஆதாரமாய்ப் பிடித்திருந்தார்; அவரது கண்களும் தெளிவா யிருந்தன. அவர் கையில் அவ்விதையைக் கொடுத்தார்கள். ராஜா தன் பழைய கேள்வியை ஒப்பித்தார்.

"ஓய் பெரியவரே! இம்மாதிரி விதை எங்கு விளைகின்றதென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் எப்போதாவது இத்தகைய விதையை விதைத்ததுண்டா? அல்லது யாரிடமாவது விலைக்கு வாங்கினதுண்டா?"

இவருக்கும் காது கொஞ்சம் அப்படி இப்படித்தான்; எனினும் பிள்ளைக்குத் தகப்பன் பதினயிர மடங்கு தேவலை.

"இல்லை, என் வாழ்நாளில் ஒரு தடவைகூட நான் இவ்வளவு பெரிய விதையை விதைத்ததுமில்லை, அறுவடை செய்ததுமில்லை, விலைக்கு வாங்கினதும் கிடையாது. ஏனெனில் என் காலத்தில் வியாபாரத்தில் பணப் புழக்கம் ஆரம்பிக்கவில்லை; அவனவனுக்குத் தேவையான அளவு அவனவன் பயிர் செய்து கொள்வான்; மற்றப் பொருள்களை யாவரும் பங்கிட்டுக்கொண்டு அனுபவிப்போம். எங்கள் காலத்தில் இப்போதைக் காட்டிலும் தான்யங்கள் பெரியவையாயும், சத்துள்ளவையாயும் இருந்தன. என்றலும் இவ்வளவு பெரிய விதையை நான் இதுவரையில் பார்த்ததில்லை. எங்கள் தகப்பனர்தான் அடிக்கடி சொல்லுவார்; தங்கள் காலத்தில் எங்கள் காலத்தைக் காட்டிலும் தானியங்கள் மிகமிகப் பெரிதாயும், சத்துள்ளதாயும் இருந்தனவாம். ஒரு வேளை அவர் வேண்டுமென்றல் இதைப்பற்றி ஏதாவது தெரிவிக்கக் கூடும்" என்று கிழவனின் தகப்பனர் பதிலளித்தார்.

அவருடைய தகப்பனருக்கும் சொல்லியனுப்பப் பட்டது: அவரும் வந்து சேர்ந்தார். அவர் கவைக் கோல்களின் ஆதார மில்லாமலே நடந்து வந்தார்; உடலில் தசைகளெல்லாம் திகழ்ச்சி பெற்றுத் தளதளப்பாயிருந்தன; கூர்

மையான பார்வை, தெளிவான பேச்சு. அவ்வபூர்வ விதை அவருக்கும் காட்டப் பட்டது,

"ஆ! இந்த மாதிரி விதையைப் பார்த்து ரொம்ப நாளாய் விட்டது" என்று சொல்லிக் கொண்டே அவர் ஒரு சிறு முனையைக் கிள்ளி, அதை மென்று பார்த்தார். "அதே தான் இது. சந்தேகமில்லை" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டார்.

"ஓய் பெரியவரே? இந்த மாதிரி விதை எங்கு, எப்பொழுது பயிரிடப் பட்டது? நீங்களே விதைத்ததுண்டா? அல்லது யாரிடமாவது விலைக்கு வாங்கினதுண்டா?" என்றார் ராஜா.

"எங்கள் காலத்தில் இந்த விதைதான் எங்கும் எல்லோராலும் பயிரிடப் பட்டது. இந்தமாதிரியான தான்யத்தால் தான் நானும் எனது குடும்பமும் வளர்ந்தது. நானே என் சொந்த நிலத்தில் இவற்றை விதைத்தும், அறுவடை பண்ணியு மிருக்கிறேன்" என்று தாத்தாவுக்குத் தாத்தாவாகிய அக்கிழவர் பதில் சொன்னார்.

திரும்பவும் ராஜா கேட்டார் :—

" தங்கள் காலத்தில் இத்தகைய விதையை யாராவது விற்பனை செய்வதுண்டா? அல்லது விலைக்கு வாங்குவதுண்டா ?"

" எங்கள் காலத்தில் தான்யங்களை விற்பதோ விலைக்கு வாங்குவதோ பெரும் பாவங்களாகக் கருதப்பட்டன; அந்தக் காலத்தில் பணம் கிடையாது; அதன் கேடுகளும் கிடையாது. ஒவ்வொருவனும் அவனவனுக்குத் தேவையான தான்யத்தை அவனவன் பயிரிட்டு உபயோகித்து வந்தான்" என்று கிழவர் கூறினார்.

" தாங்கள் எவ்விடத்தில் இம்மாதிரி விதையைப் பயிர் செய்தீர்கள் ? உங்கள் நிலம் எங்கிருக்கிறது ?"

கிழவன் சொல்லுகிறான்:—

"நிலமெல்லாம் கடவுளுக்குச் சொந்தம். எங்கு நான் உழுகிறேனோ அங்குதான் என் வயலுண்டு. பூமி எல்லோருக்கும் பொது; என் வயல் உன் வயல் என்ற கதையெல்லாம் அப்போது கிடையாது. ஒருவனுக்கு அவனுடைய உழைப்பின் பயன்தான் சொந்தமானது; நிலம் சொந்தமில்லை"

ராஜா ஆச்சரியத்தோடு கேட்டார்.

"பெரியவரே! ஒரு காலத்தில் சாதாரணமாக விளைந்து வந்த இந்த விதை இப்போது ஏன் விளைவதில்லை? தவிர, உம்முடைய பேரன் இரண்டு கவைக்கோலின் ஆதரவின் மேல் நடக்கிறான்; உம்முடைய மகனுக்கு ஒரு கவைக்கோல் போதுமா யிருக்கிறது; தாங்களோ நல்ல இளைஞனைப்போல் நேராக நிமிர்ந்து நடக்கிறீர்கள்; உங்கள் கண் பார்வை மங்க வில்லை; பற்களின் வலிமை குறையவில்லை; பேச்சுத் தடுமாற வில்லை; இந்த இரண்டுக்கும் காரணமென்ன? தயவு செய்து தெரிவிக்க வேண்டும்."

பெரியவர் சொல்லுகிறார்:—

"அரசே; மனிதர்கள் தங்கள் சொந்த உழைப்பில் நம்பிக்கையை இழந்து விட்டார்கள்; அயலார் சொத்துக்கு ஆசைப்படுகிறார்கள். எங்கள் காலத்தில் அப்படியில்லை. கடவுளின் நீதிப்படி ஜனங்கள் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். தங்களுக்குத் தாங்களே எஜமானர்களா யிருந்தனர்; பிறர் தலையில் கைவைக்க அவர்கள் விரும்பவில்லை. காரணம் இதுதான்."

# கடவுளின் தோல்வி

மலை வாசிகளிடையே ஒரு கதை வழங்கி வருகிறது.

ஆதிகாலத்தில் கடவுள் மனிதனைப் படைத்தார். அப்போது மனிதர்களுக்குத் தொழிலில்லை; வீடில்லை; ஆடை, அணிகள், ஆகாரம் யாதுமில்லை.—இவைகளின் தேவையுமில்லை. ஒவ்வொரு மனிதனும் பூரணமாக நூறு வருஷம் வரை வாழ்ந்து வந்தான்—நோய் என்ற பேச்சே கிடையாது.

சிறிது காலம் சென்றது; தாம் படைத்த மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளக் கடவுள் தம் வான அரண்மனையிலிருந்து கீழே உற்றுப் பார்த்தார். அவர்கள் தங்கள் வாழ்வில் இன்பங் காணவில்லை; ஒவ்வொருவனும் சுயநலத்தால் மற்றவனோடு சச்சரவு செய்து கொண்டிருந்தான்—வாழ்க்கைப் பரிசை அவர்கள் 'குரங்கின் கைப் பூமாலைபோல், அலங்கோலப் படுத்தித் துன்பக் களறாய்ச் செய்திருந்தனர்.

கடவுள் தமக்குத் தாமே சொல்லிக்கொள்கிறார்:—"ஒருவருக் கொருவர் சம்பந்தமில்லாமல் வாழ்வதால் தான் இந்த நெருக்கடி உண்டாகிறது; ஒவ்வொருவனும் சுய நலத்தையே பெரிதாகக் கவனிக்கிறான்." இதைத் தடுப்பதற்காக அவர் மனிதனுக்குத் தொழிலை எற்படுத்தினார். குளிரையும், பசியையும் நீக்கிக் கொள்ள வீடு கட்டிக் குடித்தனம் செய்ய வேண்டி யிருந்தது; நிலத்தை உழவும், ஆட்டு மாட்டு மந்தைகளை மேய்க்கவும் மனிதன் தெரிந்து கொண்டான்.

"தொழில் மனிதர்களை ஒற்றுமைப் படுத்தும். ஒரே மனிதன் தனிமையாக வீடு கட்டவும், மரம் வெட்டவும், நிலத்தை உழவும் முடியாது. அப்போது ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்வார்கள். ஒற்றுமையும், சுகமும் கட்டாயம் ஏற்படும்" என்று கடவுள் நினைத்தார்.

கொஞ்ச காலமாயிற்று; கடவுள் திரும்பவும் கீழே பார்த்தார். மனிதர்கள் முன்னைக் காட்டிலும் மோசமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் பல பேர்களாகக் கூடித்தான் வேலை செய்தார்கள்—ஏனெனில் வேறு வழி யில்லை—எனினும் பூராவாக ஒன்று சேரவில்லை; பல வகுப்பு களாக ஜனங்கள் பிரிந்து போயினர்; செய்யவேண்டிய வேலை களை ஒவ்வொரு வகுப்பாரும் பிறிதொரு வகுப்பாரின் தலை யில் சுமத்தத் தயாரா யிருந்தனர். சண்டையும், சச்சரவும் அளவு கடந்து போயின.

இதைப் பார்த்ததும் கடவுள் மனிதர்களைச் சீர்திருத்த வேறொரு வழியை யோசித்தார். அதாவது மனிதர்கள் தங் கள் மரண காலத்தை அறியாமற் போக வேண்டும் என்று முடிவு காட்டினர். இதனால் "எப்போது சாவோமோ; இருக்கும் வரை நல்ல முறையில் இருந்து விட்டுப் போவோமே" என்று ஒவ்வொருவனும் நினைப்பான் என் பது கடவுளின் எண்ணம்.

பின்னும் கொஞ்ச காலம் கழிந்தது; கடவுள் திரும்ப வும் கீழே பார்த்தார். ஆனால் ஜனங்கள் சீர் திருந்தியதாகத் தெரிய வில்லை; அவர்களது வாழ்க்கை முன்னைக் காட்டிலும் மோசமாய் இருந்தது.

பலவான் பலஹீனனை அடக்கி ஆண்டு வந்தான். வாழ் கிறவரையில் மற்றவர்களை அடித்தோ, உதைத்தோ நம்மா லியன்ற அளவு சுகமாக வாழலாமே என்பது பலவானின் வாதம். பலஹீனர்கள் உழைத்து உழைத்து ஓய்வில்லாமல் உளுத்துப் போயினர்; பலவான்கள் சோம்பேறித்தனம் அமிதமாய்ப் போவதாலேயே அழுகிப் போயினர். இவ்விரு சாராருக்கும் எப்போதும் வெறுப்புத்தான்.

கடவுள் கடைசி முறையாக மக்களைச் சீர்திருத்த வியா திகளை உலகிற் கனுப்பினர். வியாதியஸ்தர்களைக் கண்டா வது மனிதர்களுக்குள் அன்பும், கருணையும் வளராதா என்று கடவுள் நினைத்தார். தனக்கு நோய் வந்தால் மற்றவர்கள்

4B
12-10

உதவி செய்யவேண்டுமே என்ற காரணத்திற்காவது, தானும் மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்று ஒவ்வொருவனும் நினைப்பான் என்பது அவரது தீர்மானம்.

நாள் பல கடந்தன; கடவுள் திரும்பவும் கீழே பார்த்தார். நிலைமை மிக மிக மோசமாய் இருந்தது. அப்போதும் பலவான்கள் தங்களுக்கு வியாதி வந்தபோது பலஹீனர்களைக் கொண்டு தங்கள் சௌகரியங்களைக் காத்து வந்தனர். பலஹீனர்கள் பலவான் சேவைக்கே நேரம் போதாமல் தம் பிள்ளை குட்டிகளைப் பல நோய்கட்கு இரையாக்கி வந்தனர். மற்றும் சில நோய்கள் ஒட்டுவா ரொட்டி யென்று ஒருவருக்கொருவர் விலகிப் போகலாயினர்.

அப்போது கடவுள் சொல்லுகிறார். "இம்முறைகளால் மனிதர்கள் தங்கள் கடமைகளை யறிந்து சுகப்படவில்லை. இனி அவர்களாகவே தங்கள் கஷ்டங்களின் மூலம் சுக வழியைக் கண்டு கொள்ளட்டும்" என்று கூறி விட்டார். ரொம்ப நாள் வரையில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஏமாற்றியும், வஞ்சித்துமே வாழ்ந்து வந்தனர். ஆனால் கடைசியாகச் சில அறிவாளிகள் தொழில் செய்தல் இழிவானதல்லவென்றும், தொழிலாளி முதலாளி வேறுபாட்டை நிலை நிறுத்த ஏற்பட்டதல்ல வென்றும், ஒருவருக்கொருவர் அன்போடும், ஆதரவோடும் வாழவே தொழில் உபயோகப்பட வேண்டுமென்றும் தெரிந்து கொண்டனர். அதே மாதிரி நாம் எப்போது சாவோமோ, 'இப்பவோ பின்னையோ இன்னுஞ் சற்று நேரத்திலோ', அதற்குள் நாம் ஒருவருக்கொருவர் அன்யோன்யமாய் இருக்கவேண்டும் என்றும் நிச்சயப்பட்டனர். நோய்கள் உலக ஒற்றுமைக்காகத் தான் உண்டாயுள்ளன என்பதும் அவர்களுக்கு விளங்கியது.

# குட்டிப் பேயின் பிராயச்சித்தம்

அந்த ஏழைக் குடியானவன் வயலை உழுது கொண்டிருந்தான்; பாவம், அவன் காலை முதல் சாப்பிடவில்லை. பகல் சாப்பாட்டிற்கென்று ஒரு சிறிய கட்டுச் சோற்று மூட்டை அவனிட மிருந்தது. அதனை அங்கிருந்த ஓர் மரக் கிளையில் மாட்டியிருந்தான்.

வெய்யில் ஏற ஏற மாடுகள் களைத்துப் போயின; அவனுக்கும் பசி வயிற்றைக் கிண்டியது. அதனால் ஏரில் பூட்டியிருந்த மாடுகளை அவிழ்த்து மேயவிட்டு விட்டு, தான் ஆகாரம் செய்ய மரநிழலை நாடினான். ஆச்சரியம், மரக்கிளையில் அவன் தொங்க விட்டுப்போன கட்டுச் சோற்று மூட்டையைக் காணோம். கிளை கிளையாய்த் தேடினான், புதர் புதராய் எங்காவது விழுந்து விட்டதோ என்று நுழைந்து பார்த்தான்—கிடைக்க வில்லை. அது வரையில் கண் முன்னால் தொங்கிக் கொண்டிருந்த கட்டுச் சோற்று மூட்டை திடீரெனக் காணாமற் போவதென்றால்?—அது ஆச்சரிய மல்லவா? குடியானவன் ஒன்றும் விளங்காமல் திகைத்தான்.

'இங்கு, காலை முழுவதும் வேறு ஒருவரும் வர வில்லையே?' என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். ஆனால் உண்மையில் சோற்று மூட்டையைத் திருடினது ஓர் குட்டிப் பேய்—அப்போது அது அங்கோர் புதரில் உட்கார்ந்து கொண்டு, அக்குடியானவன் தன்னைத்—அதாவது திருடனை-திட்டியும், சபித்தும் பாவம் செய்வதைப் பார்க்க வேண்டு மென்று சந்தோஷத்தோடு காத்திருந்தது.

குடியானவனுக்கோ தாங்க முடியாத பசிதான்—அவன் அடைந்த ஏமாற்றமும் அளவு கடந்த தென்பது வாஸ்தவம்-இருந்தாலும் அவன் உள்ளத்தில் வெறுப்போ, வாயில் சாபங்களோ உண்டாக வில்லை. "சரிதான், போனது போச்சு. ஒரு நாள் பட்டினியால் நான் என்ன செத்தா போய் விடுவேன்? பாவம், எவன் எடுத்தானோ அவனுக்கு எவ்வளவு பசியோ, அவன் தேவையைக் காட்டிலும் என் தேவை

யென்ன பெரிதா? அவன் தான் பசியாறட்டுமே" என்று அமைதியோடும், திருப்தியோடும் கூறினன்.

அப்படிக் கூறிய வாறே அங்கிருந்த குளத்து நீரைக் கை நிரம்ப அள்ளிக் குடித்துவிட்டு, சிறிது ஆயாசம் தீர ஓய் வெடுத்துக் கொண்டான். உடனே தன் மாடுகளை ஏரில் பூட்டி வயலை உழ ஆரம்பித்தான். இதைக் கண்ட குட்டிப் பேய் திடுக்கிட்டு விட்டது; அபாரமான பசியிடையிலுங்கூடக் கோப வார்த்தை கூறிப் பாவம் செய்ய ஒருப்படாத புண் யாத்மாவைக் கண்டால் குட்டிப்பேய் அஞ்சாமல் வேறென்ன செய்யும்? ஆகவே, தன் சூழ்ச்சி பலியாமற் போனதைக் கண்டு குட்டிப்பேய் பயந்து தன் தலைவனுகிய சாத்தானிடம் போய் முறையிட்டுக் கொண்டது. சாத்தான் மனமும் குழம்பியது, அவன் சிறிது நேரம் யோசித்துப் பின் சாவதானமாகத் தன் முடிவைத் தெரிவித் தான்.

"நீ அக்குடியானவனிடம் தோற்றுப் போனது உன்னுடைய தப்பிதம் என்றே நான் நினைக்கிறேன். நீ சரியான முறையில் அவனை வசப்படுத்த வில்லை; அவனுடைய குண குணங்களை அறிந்து அதன்படி நீ நடந்துகொண்டிருக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு குடியானவனும் செய்ய ஆரம்பித்தால் அப்புறம் நம் பாடு அதோ கதிதான்; பின் பிழைப்புக்கே ஆபத்து வந்துவிடும் ஆகவே நீ உடனே சென்று அவனிடம் அச்சோற்று மூட்டையைத் திருப்பிக் கொடுத்துவிடு. ஆனல் இன்றைய முதல் இன்னும் 3 வருடத்தில் அவனைப் பாவம் செய்யும்படி செய்யாவிட்டால் சுவாமியின் அபிஷேக தீர்த்தத்தில் உன்னை முழுகவைப்பேன். போய்வா" என்று கண்டிப்பாய்க் கூறினன்.

"சுவாமியின் அபிஷேக தீர்த்தம்" என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரையிலே கதிகலங்கி நடுங்கிப்போன குட்டிப் பேய் செத்தேன் பிழைத்தேன் என்று பூமியில் வந்து குதித் தது. பின்னும் தன்னுடைய தவறுதலுக்குப் பிராயச்சித்த மாக என்ன செய்யலாம் என்று யோசித்தது. ரொம்ப நேரம்

யோசனையின் பிறகு ஒரு சூழ்ச்சியான முடிவுக்கு வந்தது. உடனே அது ஓர் மனித ரூபத்தோடு குடியானவனின் கீழ் வேலையாளாகச் சேர்ந்தது. நல்ல வேனிற்காலத்திலும் கூடச் சேற்றில் பயிர் செய்தால் தான்யம் நன்கு விளையும் என்று குடியானவனுக்குக் குட்டிப் பேய் போதித்தது. அவனும் அவ்வாறே செய்தான். கொடூரமான வெய்யலில் மற்றவர்கள் பயிர்கள் வெம்பிக் கருகிப்போன காலத்தும் இவ்வேழை விவசாயியின் கதிர்கள் ஆளுயரம் வளர்ந்து, நிரம்பத் தான்யங்களோடு தலைசாய்த்து விளங்கியது. இப்போது குடியானவனிடம் தேவைக்குமேல் அதிகமான தான்யக் குவியல் நிரம்பி யிருந்தது. அடுத்தபடியாக உயர்வான மலைப் பீடபூமிகளில் பயிரிடும்படி பேய் போதித்தது. மற்றவர்கள் சாகுபடி யாவும் மழை வெள்ளத்தில் மூழ்கிச் சேதமாகிவிட்டன. ஆனால் இவனுடைய தான்யக் கதிர்கள் மட்டும் நன்கு செழித்து வளர்ந்திருந்தன. குடியானவன் வீட்டில் அமிதமாகத் தான்யங்கள் குவிந்தன. அவற்றை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே அவனுக்கு விளங்கவில்லை.

அப்போதுதான் பேய் தான்யங்களிலிருந்து சாராயம் இறக்கும் வித்தையைக் குடியானவனுக்குப் போதித்தது. முதலில் இக் குடியானவன் சாராயம் இறக்கினான். பின்னர் தானே அதைக் குடிக்க ஆரம்பித்தான். அப்புறம் அதனை மற்றவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். உடனே குட்டிப் பேய் பேய்களின் தலைவனான சாத்தானிடம் சென்று தன்னுடைய குற்றத்திற்குத் தகுந்த பிராயச்சித்தம் செய்து விட்டதாகப் பெருமையடித்துக் கொண்டது. அதைப் பரிசோதிப்பதற்காகத் தலைமைப் பேயும் குட்டிப் பேயோடு பூலோகத்திற்கு வந்தது.

குடியானவன் மாளிகைக்குள் இரு பேய்களும் நுழைந்த போது ஒரு பெரிய விருந்து நடந்துகொண்டிருந்தது. குடியானவன் தனது பணக்கார நண்பர்கள் பலரை அவ்விருந்துக்கு அழைத்திருந்தான். அவர்கள் எல்லோருக்குமாகக் குடியானவன் மனைவி சாராயம் காய்ச்சிக்கொண் டிருந்தாள்.

விருந்தினர்கள் கூடினர். அவனது மனைவி சாராயம் ஊற்றும் பொழுது ஒரு கோப்பைச் சாராயத்தைக் கை தவறிக் கீழே கொட்டிவிட்டாள். குடியானவனுக்கு அசாத்ய மான கோபம் வந்துவிட்டது. "அடி, தடிக்கழுதை, அவ்வளவு நல்ல சரக்கையும் கீழே கொட்டிவிட்டாயே. முட்டாள் நாயே. மூளை யிருந்தால்தானே?" என்று கடுமையாய்த் திட்டலானான்.

குட்டிப் பேய் தன் தலைவனைப் பார்த்துக் கூறுகிறது. "அன்று கட்டுச் சோற்று மூட்டையைத் திருடினவனை ஆசீர்வதித்த புண்ணிய மிகுந்த அதே நாக்கால் இன்று கேவலம் ஒரு கோப்பைச் சாராயத்திற்காகத் தன் அருமையான சொந்த மனைவியை என்னமாகத் திட்டுகிறான் பார்த்தீர்களா?" என்று வெற்றியோடு கொக்கரித்தது.

உடனே மனைவியின் கையிலிருந்த சாராயக் குடத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு குடியானவன் தானே பரிமாற ஆரம்பித்தான். அதே சமயத்தில் நாள் முழுதும் ஓயா துழைத்துக் களைத்துப்போயிருந்த ஒரு ஏழைத் தொழிலாளி அவ்விருந்து மண்டபத்துள் புகுந்தான். "அழையா வீட்டில் நுழையும் விருந்தாய்" வந்த அவனை ஒருவரும் கவனிக்கவில்லை. இதற்காக அவன் அதிகமாகக் கவலைப் படாமல், ஆங்கோர் மூலையிற் கிடந்த ஓர் காலி ஆசனத்தில் அமர்ந்து விருந்தினர்களுக்கு வந்தனம் கூறினான். எல்லோரும் சாராயம் அருந்தினர்; ஒருவருக்காவது இவ்வேழையைப் பற்றிய ஞாபகம்கூட இல்லை. பாவம், இவனுக்கும் நாக்கில் ஜலம் ஊறியது—எனினும், கடைசிவரையில் காத்திருந்தும் ஒரு சொட்டுச் சாராயம்கூடக் கிடைக்கவில்லை. "அடடா! ஒரு மொடாச் சாராயமும் அவர்களது தொந்திகளுக்கே போதாதுபோ லிருக்கிறதே" என்று தொழிலாளி தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டான்.

பேய்த் தலைவனுக்கு இதைப் பார்த்ததும் பரம திருப்தி. "இதென்ன, இன்னும் கொஞ்ச நேரத்தில் பாரும்" என்று குட்டிப் பேய் கூறியது.

அப்பணக்கார விருந்தினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோப்பையாகச் சாராயம் பருகினர்; குடியானவனும் ஒரு கோப்பை குடித்தான். அவ்வளவுதான். அவர்கள் யாவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டும், புகழ்ந்து கொண்டும் தேனொழுக வழ வழ வென்று பேச ஆரம்பித்து விட்டனர்.

பேய்த் தலைவன் மிகவும் சந்தோஷப்பட்டான். "ஆ! இவ்வொரு கோப்பைச் சாராயமே இவர்களைக் குள்ளநரிகளாக்கிவிட்டது—ஒருவரை யொருவர் விளக்கெண்ணைப் பேச்சுப் பேசி ஏமாற்றப் பார்க்கின்றனர். ஏன், இனி இக் கூட்டம் முழுமையும் எனக்கு வசப்பட்டது போலத்தான்" என்று அபாரமான திருப்தி யடைந்தான்.

அப்போது குட்டிப்பேய் கூறியது:—

"கொஞ்சம் பொறுமை யோடிரும். இப்போது வலைக் குழைக்கும் நரிகள் போல் ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு, தந்திரப் பேச்சுப் பேசும் இவர்களே, இரண்டாவது கோப்பை யருந்தியவுடன் வெறி பிடித்த ஓநாய்களாக மாறி விடுவர். அப்போதல்லவா வேடிக்கை"

ஒவ்வொருவரும் திரும்பவும் ஒவ்வொரு கோப்பை சாப்பிட்டனர். விளக்கெண்ணைப் பேச்சுக்குப் பதில் கொடூரமான சாபங்களும், கடுமையான பயமுறுத்தல்களும் அவர்கள் வாயில் தாராளமாய்த் தாண்டவமாடின. அது மட்டுமா ஒருவரை ஒருவர் அடிக்கவும், குத்தவும், மூக்கைப் பிடித்திழுக்கவும் ஆரம்பித்தனர். இதில் குடியானவனும் கலந்து கொண்டான்; அவனை எல்லோரும் கீழே போட்டுத் துவைத்தனர்.

பேய்த் தலைவனுக்கு இதைப் பார்க்கப் பார்க்க ஆநந்தம் பொங்கியது "பேஷ், நீ செய்த வேலை அபாரமானது, மெச்சினேன்" என்று குட்டிப்பேயின் முதுகில் தட்டிக் கொடுத்தான். அப்போது குட்டிப்பேய் குதூகலத்தோடு "இன்னும் சிறிது நேரம் பொறுத்திரும். அவர்கள் மூன்றாவது கோப்பையையும் குடிக்கட்டும். இப்போது ஓநாய்களாய்

4-13
12-90

இருப்பவர்கள் சில நிமிஷங்களில் பன்றிகளாய் மாறும் வேடிக்கையைப் பாருங்கள்" என்று கூறியது.

ஒவ்வொருவனும் மூன்ரும் தடவையாக ஒவ்வொரு கோப்பைச் சாராயத்தைக் காலி செய்தான். உடனே அவர்கள் கண்ட படி அர்த்த மில்லாமல் கூச்சலிட ஆரம்பித்தனர்- தாங்கள் பேசுவதோ, அன்றிப் பிறர் கூறுவதோ, யாதொன்றும் அவர்களுக்குப் புரிய வில்லை. கடைசியாக ஒவ்வொருவரும் வெளிக் கிளம்பலாயினர்—இருவர் மூவராகக் கைகோத்துக் கொண்டு சிலரும், தனித் தனியாகச் சிலரும்—பொதுவாக எவ்லோரும் தெருவில் உருண்டு கொண்டே சென்றனர். இவர்களை வழியனுப்ப வந்த குடியானவன் வாசற்படியிலிருந்த ஓர் சேற்றுக் குழியில் தொப் பென்று குப்புற விழுந்தான்; அவனது மூக்கு 'சட்னி'யாய் விட்டது—அவன் வெறியாலேயோ, அன்றி விழுந்த அதிர்ச்சியாலேயோ பன்றி போல் உறுமலானுன்.

தலைமைப் பேய் சாத்தானின் சந்தோஷம் கரை கடந்து விட்டது. "நல்ல வேலை செய்தாய். உன்னுடைய குற்றத்திற்குப் பிராயச் சித்தமாக மட்டு மல்ல. நம்முடைய ராஜ்யத்தின் நிரந்தரமான வெற்றிக்கே நீ மார்க்கம் கண்டு பிடித்து விட்டாய். ஆனுல் இந்தத் திரவ வஸ்துவை எப்படிச் செய்தாய். நரியின் ரத்தத்தை முதற் கோப்பையிலும், ஓநாயின் ரத்தத்தை இரண்டாங் கோப்பையிலும் பன்றியின் ரத்தத்தை மூன்ருவதிலுமாகக் கலந்தாயா?" என்று சாத்தான் கேட்டான்.

குட்டிப் பேய் குதூகலத்தோடு கூறியது:

"அப்படி பொன்றுமில்லை. நான் உபயோகித்த முறை ...ு வேறு. குடியானவன் தேவைக்கு அதிகமாகச் சாகுபடி ...யும் படிக்குத் தந்திரம் செய்தேன். அவ்வளவுதான் —அவனுடலில் விலங்குகளின் (நரி, ஓநாய், பன்றி) ...ன்னமேயே இருந்தது; அதை நான் உற்பத்தி ... ஆனுல் இதுவரையில்—அதாவது அவன்

சோற்றுக்காக மட்டும் பயிரிட்டுக் கொண்டிருந்த வரையில் அந்த ரத்தம் வெளிப்பட மார்க்கமில்லாதிருந்தது. ஒரு காலத்தில் அவன் மிகுந்த பட்டினி நிலையிலும் காணமற் போன கட்டுச் சோற்று மூட்டையைப் பற்றிக் கவலைப்படா திருந்தானே—அந்த நிலை. ஆனால் கொஞ்சம் தேவைக்கு அதிகமாகத் தான்யம் கிடைத்தவுடன் அவனுக்கு உல்லாச மான போதுபோக்குகளில் மனம் திரும்பலாயிற்று. அப் போதுதான் நான் என் வேலையைத் துவக்கினேன்—அதா வது அவனுக்குச் சாராயம் காய்ச்சவும் குடிக்கவும் கற்றுக் கொடுத்தேன். அவன் என்று கடவுள் அளித்த உணவுப் பொருளை, சோம்பித் திரியவைக்கும் சாராயமாக இறக்க ஆரம் பித்தானோ, அன்று முதல் அவனுடலிலும், உயிரிலும் நரி, ஓநாய், பன்றி இவைகளின் ரத்த வெறி வீறுகொண் டெழுந் தது. ஒரு முறை கள்ளை அருந்தியவன் எப்போதுமே மிருக மாய் மாறிவிடுகிறான்" என்று தற்பெருமையோடு கூறிக் கொண்டு கொம்மாளமிட்டது.

சாத்தான் குட்டிப் பேயைக் கட்டித் தழுவிப் பாராட்டி னான்; பிழையுங் குற்றத்தை மன்னித்தான். பேயுலகத்தில் ஒரு பகுதிக்குக் 'கவர்னராக'ப் 'பிரமோஷன்' செய்தான்.

---

Swathanthara Sangu Press, Triplican

# சங்கு நூல்கள்

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| மகாத்மா காந்தி எழுதிய | | | | |
| சத்திய சோதனை (முதல் பாகம்) | .... | 1 | 8 | 0 |
| சத்திய சோதனை (இரண்டாம் பாகம்) | ... | 2 | 0 | 0 |
| இல்லறமும் பிரும்மசரியமும் | .... | 0 | 6 | 0 |
| அனுசக்தி யோகம் | .... | 0 | 4 | 0 |
| ஆரோக்கிய வழி | ... | 0 | 4 | 0 |
| மகா தியாகம் | .... | 0 | 4 | 0 |
| நீதி தர்மம் | ... | 0 | 2 | 0 |
| கீதா போதனை | ... | 0 | 2 | 0 |
| உத்தம வாழ்க்கை | ... | 0 | 2 | 0 |
| ஹிந்து தர்மம் | ... | 0 | 2 | 0 |
| ரோமேன் ரோலண்டு எழுதிய | | | | |
| மகாத்மா காந்தி (புதிய பதிப்பு) | .... | 0 | 4 | 0 |
| வில்லியம் தர்ஸ்டன் எழுதிய | | | | |
| இல்லற மகா ரகசியம் | .... | 0 | 4 | 0 |
| பகதூர்ஜி கமிட்டி அறிக்கையான | | | | |
| இந்தியாவின் கடன் பொறுப்பு | ... | 0 | 4 | 0 |
| க. சந்தானம் எழுதிய | | | | |
| சத்திய சமாஜம் | .... | 0 | 4 | 0 |
| வ. வே. ஸு. அய்யர் எழுதிய | | | | |
| மங்கையர்க்கரசியின் காதல் கதைகள் | .... | 0 | 8 | 0 |
| குரு கோவிந்த சிங் | .... | 0 | 3 | 0 |

சுதந்திரச் சங்கு புத்தகசாலை,

பைக்கிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.